ஸ்ரீவரதேந்திர தீர்த்தரின்

கன்னட தந்த்ரஸார ஸங்க்ரஹம்

தமிழில் உரை எழுதியவர்:

திரு. குரோம்பேட்டை R. ஸ்ரீதரன்
சென்னை

வெளியீடு

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு

ஸ்ரீவரதேந்திர தீர்த்தரின்
கன்னட தந்த்ரஸார ஸங்க்ரஹம்

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால்
ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தரின் ஆராதனை நாளான
19-12-2021 அன்று இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது

வெளியீடு:
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

சலுகை விலையில் இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு பொருளுதவி புரிந்த ஹரி பக்தர்கள் அனைவருக்கும் நன்றி!!

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர் அருளிய கன்னட தந்த்ரஸார ஸங்க்ரஹம்

ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர் ஸ்ரீ ராகவேந்திர மடப் பரம்பரையில் பீடாதீஸராக அலங்கரித்த மஹனியர். ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் சூசனை அளித்தது போலவே, ஸ்ரீ ராகவேந்திரருக்குப் பிறகு 7வதாக பீடத்தில் அமர்ந்தவர். இவர் பூர்வாஸ்ரமத்தில் பலராமாசார்யாராக இருந்த போதே மிகப்பெரிய வித்வானாக விளங்கியவர். ஸ்ரீ வஸுதேந்திர தீர்த்தரிடத்தில் ஸ்ரீமன் ந்யாயஸுதா மற்றும் வ்யாஸத்ரய கிரந்தங்களைக் கற்றுத் தேர்ந்தவர். புகழ்பெற்ற ஸ்ரீ ஜகன்னாத தாஸருக்கு சிறுவயதில் அவர் ஸ்ரீநிவாஸாசார்யராக இருந்தபோதே, குருவாக இருந்து அனுக்ரஹம் புரிந்தவர். ஸ்ரீ வரதேந்திர தீர்த்தராக ஸன்யாஸ ஆஸ்ரமம் ஏற்று பாரத தேஸம் முழுக்க திக்விஜயம் செய்து, தத்வ பிரசாரம் செய்து, வாதங்களில் வென்று புனேவில் தாம் வாதத்தில் வென்றதினால் கிடைக்கப்பெற்ற இடத்திலேயே பின்னர் பிருந்தாவனஸ்தரானார். இதேபோல் இவர் பிருந்தாவனஸ்தரான பிறகும் கூட இவரது மஹிமையை பறைசாற்றும் வகையில், முன்பு ஸ்ரீ ப்ராணேஸ தாஸர் தானமாக அளித்த இடத்தில் (லிங்கஸுகூரில்) துளஸி செடியாகத் தோன்றி, அங்கு பின்னர் இவரின் ஸ்வப்ன பிருந்தாவனமும் அமைந்தது. தாஸ ஸாஹித்தியம் மற்றும் வியாஸ ஸாஹித்தியம் என இரண்டுக்குமே தமது பங்களிப்பை அளித்த மஹனீயர் இவர், ஸ்வாமிகள் சமஸ்கிருதத்தில் இயற்றிய 'தேவபூஜா பத்ததி' மிகப் பிரஸித்தி பெற்றதாகும். அந்த வகையில் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர் ஸ்ரீமதானந்த தீர்த்தரின் தந்த்ரஸார ஸங்க்ரத்தையும், தமது குருவான ஸ்ரீ வஸுதேந்திர தீர்த்தரின் தந்த்ரஸார ஸங்க்ரஹத்தின் வ்யாக்யானத்தையும் அனுசரித்து, தமது சிஷ்யரான ஸ்ரீ ஜகன்னாத தாஸரின் வேண்டுகோளுக்கிணங்க, கன்னடத்தில் பாமரரும் அறியும் வண்ணம் இயற்றிய கிரந்தமே இந்த "கன்னட தந்த்ரஸார ஸங்க்ரஹம்" என்பதாகும்.

ஸ்ரீ வரதேந்திர தீர்த்தரின் 'கன்னட தந்த்ரஸார ஸங்க்ரஹம்' என்பது 29 பத்யங்களில் அமைந்தது ஆகும். பல்வேறு மந்திரங்கள், ஜெபிக்கும் முறை, க்ரியைகள், மகத்துவங்கள், சிலை வழிபாடு, கோயில் கட்டும் முறை முதலான விஷயங்களை உரைக்கும் 'மூல தந்த்ரஸாரம்' என்பது பகவான் ஸ்ரீ ஹயக்ரீவர் ரூபி பரமாத்மாவினால் பிரம்ம தேவருக்கு உபதேஸிக்கப்பட்டது. அதை அனுசரித்து பாவி பிரம்மாவாகிய ஸ்ரீ வாயு பகவானின் அவதாரமாகிய ஸ்ரீமதானந்த தீர்த்தர் தாம் இயற்றிய 'தந்த்ரஸார ஸங்க்ரஹம்' என்ற ஸமஸ்க்ருத கிரந்தத்தில் 4 அத்தியாயங்களில் 402 ஸ்லோகங்களில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களின் தொகுப்பை அளித்துள்ளார். இவற்றில் முதல் இரண்டு அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பாக அஷ்ட மஹா மந்திரங்களைப் பற்றிய விளக்கங்களை பாமரரும் அறியும் வகையில் சரளமான கன்னட மொழியில் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர் இயற்றியதுடன், அதற்கான பலஸ்ருதியையும் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

முதலில் பல்லவியில் தாமரைக் கண்ணனான ஸ்ரீஹரியையும், திருமகளையும் காக்கும்படி வேண்டி "பாஹி பங்கேருஹேக்ஷண ஸர்வகாமத பாஹி பத்மாலய நிகேதன ஸதா" எனத் தொடங்குகிறார் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர்.

பத்யம் 1-ல் குரு மஹனீயர், "ஜயது சதுரானன பவேந்த்ராதி வினுத ஜயது சதுரானன ரமாவல்லபா | ஜயது ஸம்பூர்ண சித்ஸுகமுக ஸுகுண நிலய ஜயது ஜன்மாதி காரண தோஷஹா ||" என அமைத்து, நான்முகனான பிரம்மதேவன், சிவன், இந்திரன் போன்றவர்களால் வணங்கப்படுபவன் ஸ்ரீ ஹரி என விளக்கி, பிரதானமாக ஸ்ரீ ஹரியையும், இன்னும் பிற தெய்வங்களையும் தாரதம்ய கிரமத்தில் துதித்துப் பாடி, அதிலும் குறிப்பாக 'ஜயது' என்ற சப்தத்தை மீண்டும் மீண்டும் உபயோகித்து ஸ்தோத்திரம் செய்வதால் நமக்கும் அத்தகைய வெற்றியை ஈட்டும் கிரந்தமாக இது அமைகிறது என உணர்த்தியுள்ளார்.

2 & 3-ம் பத்யங்களில், மஹாலக்ஷ்மியின் ஸேவையை ஏற்று ஆனந்தமாக வீற்றிருக்கும் தமது தந்தையான ஸ்ரீஹரியை

பிரம்மதேவர் வணங்கி, "எல்லா தேவதைகளைக் காட்டிலும் உத்தமன் யார் எனவும், அவன் எந்தெந்த சப்தங்களினால் துதிக்கப்படுகிறான் எனவும் எழுப்பிய கேள்விகளைப் பற்றி "ஆவ தேவோத்தமனு ஆவாவ குணகளிஹவாவாவ ஸப்தவாச்யாவரீதி" போன்ற பதங்களினால் விவரித்துள்ளார் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர்.

4 முதல் 10 வரையிலான பத்யங்களில் ஸ்வாமிகள், ப்ரணவ மந்திரத்தைப் பற்றியும், ப்ரணவத்தில் 'இருந்து எழுத்துக்களும் (வர்ணங்களும்), சப்தங்களும் உருவாவதைப் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார். 4.முதல் 6 வரையிலான பத்யங்களில் ப்ரணவத்தால் அறியப்படுபவன் தானே எனவும், தானே ஸர்வோத்தமன், அனந்த குணங்களைக் கொண்டவன் (நற்பண்புகள்) எனவும் கூறி, ஸ்ரீ ஹரி பிரம்ம தேவருக்கு உபதேஸம் செய்யும் விதமாக மேவும் தொடர்ந்து, 8 எழுத்துக்களைக் கொண்ட ப்ரணவத்தில் முறையே அகார, உகார ,மகார, நாத, பிந்து, கோஷ, ஷாந்த, அதிஷாந்த என்னும் வர்ணங்களும் (எழுத்துக்களும்), அவைகளுக்கு ப்ரதிபாத்ய தேவதையாக விஷ்ணுவாகிய தாமே அந்தந்த ரூபங்களில் முறையே விஸ்வ, தைஜஸ, ப்ராக்ஞ, துர்ய, ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா மற்றும் ஞானாத்மா என விளங்குவதாகவும், வேதங்களில் ரிஷிகள் இந்த மந்திரத்தையே ஜபித்து, அதன் பலனாக தமது லோகமான வைகுண்டத்தை அடைவார்கள் எனவும், பகவான் உபதேஸம் செய்ததை "ஸாதரதி கேளின்னு அகார உகார மகார நாத பிந்து கோஷ ஷாந்தாதிஷாந்த | ஈ திவ்ய வர்ணதலி விஸ்வ தைஜஸ ப்ராக்ஞ மோதமய துர்யாத்ம அந்தராத்மா || பரமாத்மா ஞானாத்மனெம்பஷ்ட ரூபதிந்திருதிஹனு" போன்ற பதங்களினால் விளக்கியுள்ளார்.

7 முதல் 10 வரையிலான பத்யங்களில் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர், ப்ரணவத்தில் உள்ள 8 எழுத்துக்களிலிருந்து இன்னும் பிற எழுத்துகள் உருவாவதைப் பற்றி பகவான் பிரம்மதேவருக்கு மேலும் விளக்கும் விதமாக, அகாரத்திலிருந்து 16 உயிர் எழுத்துக்களும் (ஸ்வர) அவற்றின் அபிமான தேவதைகளும் (ஹரியின் ரூபத்தில்) முறையே அ-அஜ, ஆ-ஆனந்த, இ-இந்திர, ஈ-ஈஸ, உ-உக்ர, ஊ-ஊர்ஜ, ரு-ருதம்பர, ரூ-ரூக, ல்ரு-ல்ருஸ, ல்ரூ-ல்ரூஜ, ஏ-ஏகாத்மா, ஐ-ஐர, ஓ-ஓஜப்ருத், ஔ-ஔளரஸ, அம்-அம்ன:, அ:-

அர்த்தகர்ப்ப: என்பன தோன்றின எனவும் விளக்கி, மேலும் மெய்யெழுத்துக்கள் (வ்யஞ்ஜன) உகார, மகார, நாத, பிந்து மற்றும் கோஷத்திலிருந்து முறையே க,ச,ட,த,ப என்னும் 5 பிரிவுகளாகவும், அவற்றில் பகவானின் ரூபங்களான தைஜஸ, ப்ராக்ஞ, துர்ய, ஆத்மா, அந்தராத்மா என்பன தோன்றின எனவும், சாந்தம் என்கிற வர்ணத்தால் ய,ர,ல,வ ஆகியவையும், அதிஷாந்தம் என்னும் வர்ணத்தால் ஷ1, ஷ2, ஸ, ஹ, ள என்னும் 5 எழுத்துக்களும் தோன்ற (அபிவ்யக்தமாக), மெய்யெழுத்துக்கள் 25ம் உயிர் எழுத்துக்கள் 16ம் பிரணவத்தின் 8 எழுத்துக்களிலிருந்து இவ்விதமாக தோன்றின எனவும், இவையனைத்திற்கும் பிரத்யேகமாக ஸ்ரீ ஹரியின் ரூபங்கள் உண்டு எனவும் கூறி, பின்னர் பரமாத்மா மற்றும் ஞானாத்மா ரூபங்களிலிருந்து ஒன்பது உவமையற்ற ஸ்ரீ ஹரியின் ரூபங்கள் அபிவ்யக்தமாயின எனவும் "உம நாத பிந்து கோஷகளிந்த கசடதப விமலவர்க்ககளு புட்டிதவு ஐது |", "பஞ்சவிம்ஷதிரூப அபிவ்யக்தவாதவு விரிஞ்சி கேள் ஷாந்ததிம் யரலவகளு", "பரமாத்மா ஞானாத்ம ரூபதிந்தொம்பத்து நிருபமஸ்வமூர்த்திகளு ஷோபிஸிதவு |" போன்ற பதங்களினால் விளக்கியுள்ளார்.

10 & 11வது பத்யங்களில் நாராயண அஷ்டாக்ஷர (எட்டெழுத்து) மந்திரத்தைப் பற்றி விளக்கியுள்ள ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர், ஸ்ரீ ஹரி பிரம்மதேவருக்கு மேலும் உபதேஸம் அருளும் விதமாக, பிரணவத்தின் 8 வர்ணங்களில் (ஒலிச் சொற்கள்) இருந்து 'ஓம் நமோ நாராயணாய' என்னும் எட்டு எழுத்து மந்திரம் தோன்றியதாகவும், இந்த எழுத்துக்களுக்குரிய ஸ்ரீ ஹரியின் ரூபங்கள் முறையே விஷ்வ, தைஜஸ, ப்ராக்ஞ, துர்ய, ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா மற்றும் ஞானாத்மா என்னும் பிரணவத்துக்குரிய 8 ப்ரதிபாத்ய ரூபங்களே என்பதையும் அழகாக விவரித்துள்ளார்.

12 & 13 வது பத்யங்களில் வ்யாஹ்ருதி மந்திரத்தை பற்றி விளக்கியுள்ள குரு மஹனீயர் பிரம்மதேவருக்கு ஸ்ரீ ஹரி மேலும் உபதேசம் செய்யும் விதமாக, பிரணவத்தின் நான்கு எழுத்துக்களில் இருந்து (அகாரம், உகாரம், மகாரம், நாதம்) முறையே உருவான "ஓம் பூ: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் பூர்புவஸ்ஸுவ:" என்னும்

நான்கு வர்ணங்களே 'வ்யாஹ்ருதி மந்திரம்' எனப்படுவதாகும் என விளக்கி, இந்த வ்யாஹ்ருதி மந்திரத்தின் நான்கு வர்ணங்களுக்கு ப்ரதிபாத்ய ரூபங்கள்(ஸ்ரீ ஹரியின் ரூபங்கள்) முறையே அனிருத்த, பிரத்யும்ன, ஸங்கர்ஷண மற்றும் வாஸுதேவ என்பதாகும் என விளக்கியுள்ளார்.

13 முதல் 15 வரையிலான பத்யங்களில் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர் 'ஓம் விஷ்ணவே நம:' என்னும் 6 எழுத்து மந்திரத்தையும், 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்னும் 12 எழுத்து மந்திரத்தையும் பற்றி குறிப்பிட்டு, த்வாதஸாக்ஷர மந்திரத்தை பற்றி விளக்கும்படியாக நான்கு வ்யாஹ்ருதிகளில் (பூ: - ஓம், புவ: - நமோ, ஸ்வ: (ஸுவ:) - பகவதே, பூர்புவஸ்வ: (ஸுவ) - வாஸுதேவாய) உள்ள ப்ரதிபாத்ய ரூபங்களே தலைகீழாக முறையே வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன மற்றும் அனிருத்த என்பதாகவும், நான்கு வ்யாஹ்ருதிகளே வாஸுதேவ மந்திரத்தின் நான்கு பாதங்களை பிரதிபலிப்பதாகவும் விளக்கிக் கூறி, இந்த 12 எழுத்து மந்திரத்தில் ஒவ்வொரு எழுத்துக்களும் முறையே கேஸவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுஸூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ரிஷீகேஸ, பத்மநாப மற்றும் தாமோதர முதலான 12 நாமங்களையும் தியானிக்க வேண்டும் என்பதையும், "நிகமாதி மொதலு நால்வர்ணதிம் ஓம் நமோ பகவதே வாஸுதேவாய எம்ப | யுகள ஆரக்ஷராத்மக மந்த்ர ப்ரதிபாத்யனா பகவத் ரூபகள" போன்ற பதங்களினால் வர்ணித்துள்ளார்.

16 & 17 வது பத்யங்களில், காயத்ரி மந்திரம் மற்றும் புருஷ ஸூக்தம் பற்றிய விளக்கங்களை அளித்துள்ளார் குரு மஹனீயர். 24 அக்ஷரங்களைக் கொண்ட காயத்ரி மந்திரமானது மூன்று முறை அஷ்டாக்ஷர மந்திரம் (3 x 8) மூன்று முறை வ்யாஹ்ருதி மந்திரம், இரண்டிரண்டு முறை ஆறெழுத்து மந்திரம் (6 x 2 x 2) மற்றும் கேஸவ முதல் ஸ்ரீ கிருஷ்ண வரையிலான 24 நாமங்கள் உள்ளடக்கியதாக த்யானிக்க வேண்டுமெனவும், மேலும் பகவான் புருஷ ஸூக்தத்தை பற்றி பிரம்ம தேவருக்கு உபதேஸிக்கும் விதத்தில், காயத்ரி மந்திரத்தின் மூன்று பாதங்களில் இருந்து மூன்று வர்க்கங்களை கொண்ட புருஷஸூக்தமும்,

புருஷஸூக்தத்தின் மூன்று வர்க்கங்களில் இருந்து ரிக், யஜுர், ஸாம என்னும் மூன்று வேதங்களும் உதயமாகி அவற்றில் இருந்து ப்ரஹ்மஸூத்ரம், மஹாபாரதம், பஞ்சராத்ர ஆகமம் போன்றவையும் தோன்றின என்பதாக ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர் இங்கு விவரித்துள்ளார்.

18 வது பத்யத்தில் 100 கோடி ஸ்லோகங்களைக் கொண்ட மூல ராமாயணம், 18 புராணங்கள், ஸ்ம்ருதிகளின் கூட்டம் மற்றும் வேத சம்பந்தமான சப்தங்கள் ஜனித்தன எனவும் இவை அனைத்திலும் போற்றப்படுபவன் தானே; இதில் சந்தேகம் வேண்டாம் என பகவானே பிரம்ம தேவருக்கு உபதேஸம் செய்துள்ளதை, "வைதிக ஸூக்த ஷப்த ஜனிஸிதவு ஸந்ததவாச்ய நானே ஸந்தேஹவில்ல" போன்ற பதங்களினால் விளக்கி உள்ளார் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர்.

19 முதல் 21 வரையிலான பத்யங்களில் பகவான் தமது குணங்களை மஹிமைகளைத் தாமே பிரம்ம தேவருக்கு உபதேஸிக்கும் விதமாக, உதிக்கும் சூரியனை காட்டிலும் காந்தியுள்ளவனாகவும், ஞானம் ஆனந்தம் முதலான சிறந்த குணங்களை உடையவனாகவும், சக்கரம், சங்கு, கதை, தாமரை போன்றவற்றைத் தரித்தவனாகவும் விளங்கும் தானே தேவ தேவோத்தமன் எனவும், இவ்விதமாக தன்னை வணங்குபவர்களான ஸ்ரீதேவி பூதேவியின் நடுவில் க்ருத்தோல்க, விஸ்வ, கேஸவ மற்றும் மத்ஸ்ய போன்ற ரூபங்களில் விளங்குவதாகவும், பிரம்ம ஸேஷாதி தேவதைகள் தன்னை பக்தியுடன் வணங்குவதாகவும் கூறி, சங்கம், சக்ரம், வரமளிக்கும் முத்திரை, அபயஹஸ்தம் இவற்றுடன் கூடிய நான்கு கரங்களுடன் எட்டு ரூபங்களில் ஸர்வ ஆபரணங்களுடன், பிரணவ மந்திரத்தின் பிரதிபாத்யனாக நித்ய தத்வ விஷயமாக, முக்திக்குத் தகுதியுடைய ஜீவர்களால் காணப்படுபவனாக உள்ளதாகவும் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர் வர்ணித்துள்ளார்.

22 முதல் 24 வரையிலான பத்யங்களில் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர், இதுவரை ஸீதாபதி ஸ்ரீ மூலராமச்சந்திரன் பிரம்ம தேவருக்கு செய்ததாக விளக்கியுள்ள ஓம்காரம், நாராயண அஷ்டாக்ஷரம், காயத்ரி, மாத்ருக வர்ணங்கள், புருஷ ஸூக்தம், ஆறெழுத்து

விஷ்ணு மந்திரம், வாஸுதேவ த்வாதஸாக்ஷர மந்திரம் முதலான மந்திரங்களை வரிசைப்படுத்தி இதை பக்தியுடன் இடைவிடாமல் எப்போதும் படித்தால் பகவான் வேண்டியதை நல்குவான் எனப் பலனையும் எடுத்துக் கூறி, இந்தப் பாடலை தமது சிஷ்யரான ஸ்ரீ ஜகன்னாத தாஸர் பணிந்து வேண்டியதற்கிணங்க இயற்றியதாகவும் "ப்ரீதியிந்தலி நிரந்தரதலித படிஸெ ஸேஷாதபத்ரனு காமிதார்த்தவீவ ||", "ஜகன்னாததாஸ பாகி விக்ஞாபிஸலு கைகொண்டு பரமானுராகதலி பேளிதேவு தந்தரஸார ||" போன்ற பதங்களினால் விளக்கியுள்ளார்.

25 முதல் 27 வரையிலான பத்யங்களில் குரு மஹனீயர், இந்த கிரந்தத்தின் மகத்துவத்தையும், பல ஸ்ருதியையும் விளக்கும் வகையில், தமது குருவான ஸ்ரீ வஸுதேந்திர தீர்த்தரின் அருளால் இந்த கிரந்தம் பத்ய ரூபத்தில் இயற்றப்பட்டதாகவும், இதனை ரசிகத் தன்மை அற்றவர்கள் நிந்திப்பதால் குறையில்லை எனவும் கூறி, தர்மம், அர்த்தம், காமம் மற்றும் மோக்ஷம் என புருஷார்த்தங்களையும் நல்கும் நூலான இது, முதலில் ஸ்ரீ ராமச்சந்திரனே பிரம்ம தேவருக்கு அளித்தது எனவும், இதிலுள்ள எட்டு பெரும் மந்திங்களையும், அவற்றின் ரகசியங்களையும் அறிந்து பஜித்தால் அனைத்தும் சித்திக்கும் எனவும், இதனை எழுதிப் படித்து கேட்டு மகிழும் ஸஜ்ஜனர்களுக்கு ஸ்ரீ மூலராமன், ஸ்ரீ வேதவியாஸர் இம்மை மறுமை என இரண்டிலும் வேண்டிய அனைத்தையும் நல்குவார் என பலஸ்ருதியையும், "வரதேந்த்ர முனிரசித ஈ தந்த்ரஸாரவனு பரெதோதி கேளி மோதிஸுவ ஜனர வரமூலராம வேதவ்யாஸரிஹபரதி கருணிபரு பேடிதிஷ்டார்த்தகளனு" போன்ற பதங்களினால் விவரித்துள்ளார்.

28 & 29வது பத்யங்களில் மங்களம் உரைத்து இந்த கிரந்தத்தை ஸமர்ப்பணம் செய்யும் வகையில், "ரமாபதியான, பிரம்மனின் தந்தையான மத்வ முனிவரால் பூஜிக்கப்பட்ட மூலராமனுக்கு மங்களம்! சிவன், இந்திரன் முதலான தேவதைகளால் போற்றப்படும் ஸ்ரீ ஹரிக்கு மங்களம் |" எனப் போற்றித் துதித்து , 29 சரணங்களைக் கொண்ட தோஷமற்ற இந்த புஷ்ப மாலையை ஸ்ரீ மூலராமரின் திருவடிகளில் ஸமர்ப்பணம் செய்வதாகவும், இதனை ஞானிகள் தங்கள் சிரசில் பக்தியுடன் தரிக்கிறார்கள் எனவும்,

"இப்பத்தொம்பத்து பதகளெம்பதிவிமல புஷ்பமாலிகெ மூலராமனடிகெ |" அர்ப்பிஸிதேவீ ஸுமனதாமவனு தினதல்லி பப்பதிஹதே புத்ர மஸ்தகதள ||" போன்ற பதங்களினால் வர்ணித்து நிறைவு செய்துள்ளார் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தர்.

இத்தகைய உயரிய 'கன்னட தந்த்ரஸார ஸங்க்ரஹம்' என்ற கன்னட கிரந்தத்தின் பத பத அர்த்தங்களையும் பாமரரும் அறியும் வண்ணம் "ஹரிதாஸபாதபாம்ஸு" குரோம்பேட்டை திரு. ஆர். ஸ்ரீதரன் அவர்கள் மிக அழகாக தமிழில் வழங்கியுள்ளார். தமிழ்நாட்டில் உள்ள பக்தர்கள் மத்வ ஸித்தாந்தத்தை எளிதில் அறியும் வகையில் 'குருகுண ஸ்தவனம்', 'மத்வ மஹாபாரதம்', 'ப்ராத ஸங்கல்ப கத்யம்', 'விஜயதாஸரின் பஞ்ச ரத்ன ஸுளாதிகள்', 'ஸர்வ ஸமர்பண கத்யம்' முதலான நூல்களையும், முத்தாய்ப்பாக 'ஸ்ரீமன் மத்வாசாரியாரின் ஸ்ரீமன் மஹாபாரத தாத்பர்யம்' முழுவதையும் கூட தமிழில் வடித்து பெரும் சேவையாற்றியுள்ளார். அவர் அடியேனுக்கு மத்வ ஸித்தாந்த கிரந்தங்களைக் கற்க உதவிய குருவுமாவார். இத்தகைய நூல்களின் வரிசையில் அவருக்கு இந்த ஒரு படைப்பும் பெருமை சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை, அதேபோல் 'தமிழ்வாழ் பகவத் பக்தர்களுக்கு தாஸ ஸாஹித்திய படைப்புகளைக் கொண்டு சேர்க்கும் பெரும் பணியைச் சிறப்பாக செய்து வரும் 'ஜகன்னாத கேஸவ' திரு சத்யநாராயணன் அவர்கள் தமது "ஜகன்னாத கேஸவ பப்ளிகேஷன்ஸ்" மூலமாக இதை வெளியிடுவது மேலும் சிறப்பு. அவ்விருவருக்கும் ஸ்ரீ வரதேந்திர தீர்த்தரின் அந்தர்யாமியான ஸ்ரீ ராமபிரான் ஆயுள், ஆரோக்கியம், மனநிம்மதியை அளித்து, இதுபோன்ற இன்னும் அனேக நூல்களை வெளியிட ப்ரார்த்தனை செய்கிறேன்.

ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து !!

மேடவாக்கம், பிரஸங்க பூஷணம்' 'பிரவசன பூஷணம்'
சென்னை 'மத்வ ரத்னா'
03 - Dec - 2021 **S.லக்ஷ்மி பதிராஜா**

ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் இயற்றிய
கன்னட தந்த்ரசார சங்க்ரஹம்
(மூலம் மட்டும் - பாராயணத்திற்காக)

வாதே[3] விஜயஷீலாய வரதா[3]ய வரார்தி[4]னாம்
வதா[3]ன்ய ஜனஸிம்ஹாய வரதே[3]ந்த்ராய தே[1] நம: ||

ஸ்ரீஸ்ரீ வசுதேந்திர தீர்த்த கரகமல சஞ்சாத
ஸ்ரீஸ்ரீ வரதேந்திர தீர்த்த க்ருத ப்ராக்ருத தந்த்ர சார ||

பாஹி பங்கேருஹேக்ஷண சர்வகாமத[3]
பாஹி பத்[4]மாலய நிகே[1]தன ஸதா[3] ||பல்லவி

ஜயது சதுரானன ப[4]வேந்த்[3]ராதி[3] வினுத
ஜயது சதுரானன ரமாவல்லபா[4] |
ஜயது ஸம்பூர்ண சித்ஸுகமுக[2] ஸுகு[3]ண நிலய
ஜயது ஜன்மாதி[3] காரண தோ[3]ஷஹா ||1

கமலாக்ஷ பரம சம்பி[3]ரமதி[3]ந்த[3] லகுமிகர
கமலதி[3]ம் ஸேவெகொளுதிரலு ஆக[3] |
அமரநிகராராத்[4]ய கமலாஸனனு ப[3]ந்து[3]
நமிஸி பி[3]ன்னயிஸித[3]னு தன்ன பி[1]த[1]கெ[3] ||2

ஆவ தே[3]வோத்தமனு ஆவாவ
கு[3]ணக[3]ளிஹவாவாவ ஷப்த[3]வாச்யாவரீதி |
ஈ விசாரவனு பேளெனலு நஸுநகு[3]த
ராஜீவஸம்ப[4]வகெ[3] இந்தெந்து[3] நுடி[3]தா[3] ||3

வனஜசம்ப[4]வ கேளு நானே ஸர்வோத்தமனு
யனக[3]னந்தானந்த மங்க[3]ளகு[3]ண |
ப்ரணவவாச்யனு நானெ அஷ்டவர்ணோபேத

ப்ரணவத[3] விசாரவனு பேள்வெ நினகெ[3] ||4

ஸாத[3]ரதி[3] கேளின்னு அகார உகார மகார
நாத[3] பி[3]ந்து[3] கோ[4]ஷ ஷாந்தாதி[1]ஷாந்த[1] |
ஈ தி[3]வ்ய வர்ணத[3]லி விஷ்வதைஜஸப்ராக்ஞ
மோத[3]மய துர்யாத்ம அந்தராத்ம ||5

பரமாத்ம ஞானாத்மனெம்ப[3]ஷ்ட ரூபதி[3]ந்தி[3]ருதிஹெனு
வேதா[3]தி[3]யலி ஸர்வதா[3] |
பரமருஷிக[3]ளு ஈ மஹாமந்தி[3]ர ஜபிஸென்ன
புரவனைது[3]வரு ஸத்வரதி[3]ந்த[3]லி ||6

வாரிருஹஸம்ப[4]வனே கேளகாரத[3]லி ஹதி[3]னாரு
அச்சுக[3]ளு ஜனிஸித[3]வு க்ரமதி[3] |
சாரு அஜ ஆனந்த[3] இந்த்[3]ரேஷ மொத[3]லாத[3] ஈரெண்டு
மூர்த்திக[3]ளு விஷ்வஜனிதா ||7

உம நாத[3] பி[3]ந்து[3] கோ[4]ஷக[3]ளிந்த[3] கசடதப
விமலவர்க்க[3]க[3]ளு புட்டித[3]வு ஐது[3] |
கமஸலம்ப[4]வ கேளு தைஜஸ ப்ராக்[3]ஞ
துர்யாத்மாந்தராத்ம மூர்த்திக[3]ளிந்த[3]லி ||8

பஞ்சவிம்ஷதிரூப அபி[4]வ்யக்தவாத[3]வு
விரிஞ்சி கேள் ஷாந்ததி[3]ம் யரலவக[3]ளு |
ஸஞ்சிந்திஸுவுது[3] அதிஷாந்ததி[3]ம் ஷஷஸஹள
பஞ்சாக்ஷரங்க[3]ளு ஜனிஸித[3]வு இல்லி ||9

பரமாத்ம ஞானாத்ம ரூபதி[3]ந்தொ[3]ம்ப[3]த்து
நிருபமஸ்வமூர்த்திக[3]ளு ஷோபி[4]ஸித[3]வு |
பரமேஷ்டி நாராயணாஷ்டாக்ஷரா மந்த்ர
பொரெவெ நினகா[3]னு ஸாங்கோ[3]பாங்க[3]தி[3]ம் ||10

தாரக[3]த அஷ்டவர்ணக[3]ளிந்த[3] ஓம் நமோ
நாராயணாய எம்பி[3] மந்த்ரவு |

சாரு அஷ்டார்ண தத்வாச்ய மூர்த்திக³ளுண்டு
ஸார விஷ்வாதி³ ப்ரணவஸ்த² பி⁴ன்ன ||11
ஓம் பூ⁴: ஓம் பு⁴வ: ஓம் ஸுவ: ஓம் எம்ப³
ஓம்பூ⁴ர்பு⁴வஸ்வ: ஈ வியாஹ்ருதி |
அம்பு³ஜோத்ப⁴வ ப்ரணவாதி³ நால்வர்ணதி³ம்
ஸம்ப⁴விஸிதீ³ மந்த்ர ஸுலப⁴தி³ந்தா³ ||12

தனய கேளி மந்த்ரக³த நால்கு ரூபக³ளு
அனிருத்³த⁴ ப்ரத்³யும்ன சங்கர்ஷணா |
அனக⁴ ஸ்ரீவாசுதே³வன மூர்த்திக³ளு சிந்தனெ மாடு³ ஈ
வ்யாஹ்ருதியலி பி³ட³தே³ ||13

நிக³மாதி³ மொத³லு நால்வர்ணதி³ம் ஓம் நமோ
ப⁴க³வதே வாசுதே³வாய எம்ப³ |
யுக³ள ஆரக்ஷராத்மக மந்த்ரப்ரதிபாத்³யனா
ப⁴க³வத்ரூபக³ள பேள்வெ நா நினகெ³ ||14

கேஷவ நாராயணனு மாத⁴வனு கோ³விந்த³
க்லேஷனாஷன விஷ்ணு மதுசூத³னா |
ஸ்ரீஷ த்ரிவிக்ரமனு வாமன ஸ்ரீத⁴ர
ஹ்ருஷிகேஷாம்பு³ருஹனாப⁴ தா³மோத³ரா ||15

த்ரித¹ய ஆவர்த்தி அஷ்டார்ணதி³ம் மூரு
வ்யாஹ்ருதியிந்த³ த்விஷட³க்ஷ ரெரட³ரிந்த³ |
சதுராஸ்ய கேளு கா³யத்ரி உத்பன்னவாயிது
கேஷவாதி³ க்ருஷ்ணாந்தரூபா ||16

விததவாது³து³ புருஷஸூக்த கா³யத்ரியிந்த³தி¹ஷயதி³
புருஷஸூக்தத³லி வேத³ |
ததிக³ளுதி³ஸித³வு நிக³மாதி³ பிரம்மஸூத்ர பா⁴ரத
பஞ்சராத்ராதி³ ஆக³மக³ளு ||17

ஷதகோடி மூலராமாயண புராணக³ளு ஸ்ம்ருதி
ஸமூஹக³ளுபபுராணக³ளு ||

இதர வைதி³கஸூக்த (வேதோக்த) ஷப்³த ஜனிஸித³வு
ஸந்ததவாச்ய நானே ஸந்தே³ஹவில்ல ||18
உத³யிஸுவ ரவியவோல்காந்தி ஞானானந்த³
மொத³லாத³ தி³வ்ய கு³ண மய ஷரீரா |
ஸூத³ருஷனத³ர க³தா³ம்பு³ஜக³ளாயுத³வெனகெ³
த்ரித³ஷக³ணமயனு ஸர்வேஷ நாம ||19

ஈ தி³ஷெயலென்ன ஸேவிபரு ஸ்ரீ பூ⁴தே³வி
க்ருத்³தோ⁴ல்க விஷ்வகேஷவ மத்ஸ்யாதி |
மத்³ரூபக³ணமத்⁴யக³னு நாம பி³ரம்மபதிபாத்ய
ரதிப⁴க்தி ஸேவ்யனு ஸமர்த்த² ||20

அரித³ரவராப⁴யாங்கித சதுர்பு⁴ஜனு நால்கெரடு³
ரூபங்க³ளு ப்ரதீ³பவர்ண |
ஸருவாப⁴ரணபூ⁴ஷிதவாத³ மத்³ரூப நிருத மேயவு
முமுக்ஷுகளிந்த³லி ||21

தார நாராயணாஷ்டாக்ஷரவு வ்யாஹ்ருதியு
ஈராருவர்ண கா³யத்ரிமந்திர |
ஸாரமாத்ரு புருஷஸூக்த வைஷ்ணவக³ளிவு
நீரஜாஸன கேளு மஹமந்த்ரவு ||22

ஸீதாரமண மூலராமனதிஹருஷதி³
விதா⁴தகு³பதே³ஷிஸித³ ஈ தெரத³லி |
ப்ரீதியிந்த³லி நிரந்தரத³லித³ படி²ஸெ
ஸேஷாதபத்ரனு காமிதார்த்தவீவ ||
(ப்ரீதியிந்த³லி த்³வாதஷார்வதி படி²ஸலு
விதா⁴தபிதனு காமிதார்த்த²வீவ ||23

ப்³யாக³வாடத³ ரங்க³னொலித³ ஸ்ரீநரசிம்ஹ
பா⁴க³வதரணுக³ ஜகன்னாத²தா³ஸ |
பா³கி³ விக்³ஞாபிஸலு கைகொண்டு³
பரமானுராக³த³லி பேளிதே³வு தந்த்ரஸார ||24

கருணாப்[3]தி[4] வஸுதே[3]ந்த்[3]ரராயர க்ருபாப[3]லதி[3]
விரசிஸிதே[3]வீ கி[3]ரந்த பத[3]ரூபதி[3] |
அரஸிக[1]னு நிந்தி[3]ஸலு குந்தா[3]வுதி[3]த[3]கெ
பா[4]ஸ்கரனுத[3]ய கோ[4]க தூ[3]ஷிஸித[3] தெரதி[3] ||25

த[4]ர்மார்த்த[2] காமமோக்ஷக[3]ளீவ கி[3]ரந்தவிது[3]
நிர்மாண மாடி[3]ஸித[3] ராமசந்திர |
ஹேமக[3]ர்ப்ப[4]கெ[3] (ப[3]ர்மக[3]ர்ப்ப[4]கெ[3]) ஒலிது[3] பேளித[3]
மஹாமந்த்ர மர்மக[3]ளனரிது ப[4]ஜிஸுவனெ த[4]ன்ய ||26

வரதே[3]ந்த்[3]ரமுனிரசித ஈ தந்த்ரஸாரவனு ப[3]ரெதோ[3]தி[3]
கேளி மோதி[3]ஸுவ ஜனர |
வரமூலராம வேத[3]வியாஸரிஹபரதி[3] கருணிபரு
பே[3]டி[3]தி[3]ஷ்டார்த்த[2]க[3]ளனு ||27

மங்க[3]ளம் ரமாபதிகெ[3] மங்க[3]ளம் த்ருஹிணபிதகெ[3]
மங்க[3]ளம் த[3]ஷப்ரமதி முனிமான்யகெ[3] |
மங்க[3]ளம் ஷிவேந்த்[3]ராதி[3] ஸுரநிக[3]ரபூஜ்யனிகெ[3]
மங்க[3]ளம் ஜக[3]த்விலக்ஷணரூபகெ[3] ||28

இப்பத்தொம்ப[4]த்து பத[3]க[3]ளெம்ப[3]திவிமல
புஷ்பமாலிகெ மூலராமனடி[3]கெ[3] |
அர்ப்பிஸிதே[3]வீ ஸுமனதா[4]மவனு தி[3]னத[3]ல்லி
ப[1]ப்ப[1]தி[3]ஹதே பு[3]த[4]ர மஸ்தகத[3]லி ||29

॥ **ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து** ॥

ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் இயற்றிய கன்னட தந்த்ரசார சங்க்ரஹம்

வாதே[3] விஜயஷீலாய வரதா[3]ய வரார்தி[4]னாம்
வதா[3]ன்ய ஜனஸிம்ஹாய வரதே[3]ந்த்ராய தே[1] நம: ||

வாதத்தின் வெற்றிவாகை சூடுபவரும்
வரம் வேண்டுவோர்க்கு வரமளிப்பவரும்
கொடையாளிகளின் கூட்டத்தில் சிம்மம்போல கம்பீரமானவருமான குரு வரதேந்திர ஸ்வாமியே, உமக்கு எனது நமஸ்காரங்கள்.

ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் (1761-1785) ஒரு பெரிய யோகி. ஸ்ரீராகவேந்திர குருராயர் (1623-1671) அமர்ந்த குருபீடத்தில், அவருக்குப் பிறகு ஏழாவதாக வந்தவர். ஸ்ரீகுருராகவேந்திரரே இவரைப் பற்றி முன்கூட்டியே சொல்லியிருக்கிறார். 'ஸப்தமோ மத் ஸமோ யோகி வரதேந்திரோ பவிஷ்யதி' என்று, 'எனக்குப் பிறகு ஏழாவதாக பீடத்திற்கு வருபவர், எனக்கு இணையாக யோகி வரதேந்திரர் என்ற பெயரில் விளங்கப் போகிறார்' என்று அவர் கூறியது, 100 ஆண்டுகளுக்குப் பிறகு அப்படியே பலித்தது.

ஸ்ரீமன் மத்வாசார்யரின் மூலமஹா சம்ஸ்தானத்தில், ஸ்ரீராகவேந்திரர் கோலோச்சி, சரியாக 350 ஆண்டுகளுக்கு முன், 1671ம் ஆண்டில் மந்திராலயத்தில், ஸ-சரீர பிருந்தாவனத்தில் பிரவேசம் செய்து, இன்றும் ஜீவ சமாதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ராயருக்குப் பிறகு, வரிசையாக ஸ்ரீயோகீந்திர தீர்த்தர், ஸ்ரீசுரீந்திர தீர்த்தர், ஸ்ரீசுமதீந்திர தீர்த்தர், ஸ்ரீஉபேந்திர தீர்த்தர், ஸ்ரீவாதீந்திர தீர்த்தர், ஸ்ரீவசுதேந்திர தீர்த்தர் என ஆறு மகான்கள் பீடத்தில் அமர்ந்து கோலோச்சினர். ஏழாவதாக வந்தவரே நமது கதாநாயகர் ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் ஆவார்.

பூர்வாசிரமத்தில் இவர் ஸ்ரீபலராமாசார்யர் என்ற பெயரைக் கொண்டிருந்தார். பீகமுத்ரெ என்னும் பிரிவைச் சேர்ந்த மாத்வ பிராமணரான ஸ்ரீவேணுகோபாலாசார்யரின் இரண்டாவது குமாரர் இவர். அவரின் முதல் குமாரர், ஸ்ரீபுருஷோத்தமாசார்யர். அவரே பிறகு, ஸ்ரீவசுதேந்திர தீர்த்தராக மாறியவர். கடைசி குமாரரான ஸ்ரீலட்சுமி நாராயணாச்சார் பிறகு, ஸ்ரீபுவனேந்திர தீர்த்தராக மாறினார்.

ஸ்ரீபலராமாசார்யர் இளம் வயதிலேயே பெரிய வித்வானாக விளங்கியவர். இவரிடம் பாடம் பயிற ப்யாகவாட ஸ்ரீஸ்ரீநிவாசாசார்யரே, பிறகு புகழ்பெற்ற ஸ்ரீஜகன்னாததாசராக மாறினார். ஸ்ரீபலராமாசார்யர், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி, பெரும் வித்வானாக வாழ்ந்து வந்தார். அவர் தமது பூர்வாசிரம தமையனாரும், குருவுமான ஸ்ரீவசுதேந்திர தீர்த்தரிடம் ஸ்ரீமன் நியாயசுதா, வியாஸத்ரயம் ஆகிய பெரும் நூல்களைக் கற்றார். கன்னடப் புலமையும் இவருக்கு இருந்தது.

1761ம் ஆண்டு, ஸ்ரீபலராமாசார்யர், சன்யாசம் பெற்று, ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் ஆனார். அவர் பாரதம் முழுக்க திக்விஜயம் செய்து, பல பெரும் பண்டிதர்களை வென்று, தன் புகழை நிலைநாட்டினார். ஸ்ரீமடத்துக்கும் பல சொத்துகள் சேர்ந்தன. ஸ்ரீஸ்வாமிகள், தட்சிண தேசம் மட்டுமல்லாமல், க்வாலியர், புனே போன்ற வட தேசங்களிலும் சஞ்சாரம் செய்து வெற்றிக்கொடி நாட்டினார்.

மகாராஷ்டிராவில் உள்ள புனே என்னும் நகரத்தில், ஸ்ரீராமசாஸ்திரி பிரபு என்னும் மாபெரும் அத்வைத பண்டிதருடன் 17 நாட்கள் பெரும் வாதம் நடத்தி, அவரை வென்றார். ஒப்பந்தப்படி, ஸ்ரீராமசாஸ்திரிகள் தன்னுடைய அரண்மனையை ஸ்வாமிகளிடம் ஒப்படைத்துவிட்டு, காசி நகரம் சென்றுவிட்டார். பெரும் வெற்றி இது.

ஸ்ரீவரதேந்திர ஸ்வாமிகளும் குருராயரைப் போலவே பல மகிமைகளை செய்து காட்டியுள்ளார். இடம் க்ருதி இரண்டினை மட்டும் இங்கு பார்ப்போம்.
சென்னகிரி என்னும் ஊரில், ஸ்ரீஸ்ரீவரதேந்திர ஸ்வாமிகள் ஒரு மிருத்திகா பிருந்தாவனம் ஏற்படுத்தினார். அதில் குருராயர் சன்னிதானம் வந்தது, மிகவும் அதிசய செயல் ஆகும். சென்னகிரி, தாவணகெரெயின் அருகில் உள்ளது. அந்த ஊரில் இருவருக்கு, ராயரின் பிருந்தாவனம் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டது. இடமும் ஏற்பாடு செய்து விட்டார்கள். பிருந்தாவனம் செய்வதற்கு கல் தேர்ந்தெடுத்து விட்டார்கள். நஞ்சாசாரி என்னும் சிற்பியை சந்தித்து, பிருந்தாவனம் அமைக்க வேண்டினார்கள்.

அவனோ தற்போது அதற்கு நேரம் இல்லை என்று கூறிவிட்டான். அவனை விட்டால் அந்தப் பகுதியில் வேறு நல்ல சிற்பி கிடையாது. ஒரு நாள் அந்தச் சிற்பி, ஏரிக்கரையில் உலவும் போது, திடீரென்று அவனது பார்வை பறிபோனது. பல மருத்துவர்கள் பார்த்தும் எந்தப் பலனும் இல்லை. 'நான் குருராயரின் பிருந்தாவனம் செய்யாமல் விட்டதால்தான் கண் பார்வை பறிபோனது' என்று அவனுக்குத் தோன்றினது. உடனடியாக எப்படியாவது அந்த பிருந்தாவனம் செய்துவிடுகிறேன் என்று சங்கல்பம் செய்தான்.

அதனை அந்த இருவரிடம் கூறினான். அவர்கள், அந்தக் குருடனை, அந்தப் பாறை இருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவனும், அந்தக் கல்லை தடவிப்பார்த்தபடியே பிருந்தாவனம் செதுக்கினான். அந்த வேலை செய்யும்போது, அவனுக்கு அரைகுறை பார்வை தெரிந்தது ; பின் வீட்டுக்குத் திரும்பினால் பழையபடி குருடனாகவே ஆனான்.

அதன்பிறகு, எப்படியோ ஒரு வழியாக பிருந்தாவனம் செய்து முடித்தான். குருராயரின் மகிமையால், அது பிரமாதமாக அமைந்தது. அது குருடனால் செய்யப்பட்டது என்றால் யாராலும் நம்ப முடியாது என்பது போல இருந்தது. அதற்காக அந்த

இருவரும் அவனுக்கு சம்பாவனை கொடுக்க, அவனோ அதனை ஏற்க மறுத்தான். தான் செய்த தவறுக்கு வருந்தினான். என்ன ஆச்சரியம்! குருராயரின் அருளால் அவனுக்கு பழையபடி பார்வை வந்தது.

ஊர்மக்கள் அனைவரும் மந்திராலயம் சென்று, ஸ்ரீவரதேந்திரரை அந்த மிருத்திகா பிருந்தாவனம் பிரதிஷ்டை செய்வதற்கு அழைத்தனர். அவர் அவர்களுக்கு மிருத்திகையை கொடுத்தார். அவர்கள், நடந்தே அதனைக் கொண்டு வந்து, பிருந்தாவனம் அருகில் வைத்தனர். 1783ம் ஆண்டு (6-2-1783) ஸ்ரீவரதேந்திர ஸ்வாமிகள், அந்த சென்னகிரி பிருந்தாவனத்தை பிரதிஷ்டை செய்தார். இன்றும் அந்த இருவரின் வம்சத்தினர், அந்த பிருந்தாவன சேவையை செய்து வருகிறார்கள்.

ராய்ச்சூர் அருகில் லிங்கசுகூர் என்னும் ஊர் உள்ளது. அங்கு ஸ்ரீஜகன்னாததாசரின் முதல் சிஷ்யர் ஸ்ரீபிராணேஷ தாசரின் வீடு உள்ளது. அவர் ஸ்ரீவரதேந்திர ஸ்வாமிகளின் ப்ரிய சிஷ்யர். அவர், ஸ்வாமிகளை தன் வீட்டுக்கு வரவழைத்து, பல நாட்கள் சேவை புரிந்தார். ஸ்வாமிகள் அந்த ஊரை விட்டு கிளம்பும் முன்னர், தன்னிடம் உள்ள அனைத்து சொத்துக்களையும் ஸ்வாமிகளுக்கு தானம் அளிக்க முன்வந்தார்.

ஸ்வாமிகளோ தனக்கு எதுவும் வேண்டாம் என்று கூறி, நிராகரித்துவிட்டு, புழக்கடையில் உள்ள ஒரு சிறு இடத்தை மட்டும், நான் கேட்கும்போது எனக்குக் கொடு என்று கூறிச் சென்றார். ராமசாஸ்திரிகளை வென்றபிறகு, அவரின் அரண்மனையை தன் மடமாக்க மாற்றி, அங்கேயே (புனேவில்) வசிக்கத் துவங்கினார். 1785ம் ஆண்டு விஸ்வாவஸு ஆண்டு, ஆஷாட சுத்த சஷ்டியன்று, புனேவில் பிருந்தாவனஸ்தர் ஆனார். அவருக்குப் பின், ஸ்ரீபுவனேந்திர தீர்த்தர் பட்டத்திற்கு வந்தார்.

இதன் பின், சில நாட்கள் கழித்து, லிங்கசுகூரில் உள்ள பிராணேஷ தாசரின் கனவில் தோன்றி, தான் ஒரு உருவில் அவர் வீட்டில் எழப்போவதாகவும், தான் ஏற்கனவே கேட்ட, புழக்கடையில்

வைக்கோல் போர் வைக்கும் இடத்தில், தான் வந்து அமரப் போவதாகவும் கூறினார். என்ன ஆச்சரியம்! மறு நாள், அந்த இடத்தில் ஒரு ஆள் உயரத்திற்கான ஒரு துளசி மரம் இருந்தது. அதுதான் ஸ்ரீவரதேந்திரரின் மறுவடிவம் என்று நினைத்து, அங்கு பிருந்தாவனம் அமைத்தார்கள். புனேவிலிருந்து குருவின் பாதுகைகளும் எப்படியோ வந்து சேர்ந்தன. இப்படியாக, புனேவில் மூல பிருந்தாவனமும், லிங்கசுகூரில் ஸ்வப்ன-பிருந்தாவனமும் அமைந்தன.

இவர் இவற்றிய நூல்களில் இரண்டே இரண்டுதான் நமக்குக் கிடைத்துள்ளன. ஒன்று, கன்னடத்தில் இயற்றப்பட்ட தந்திரசாரம். மற்றொன்று சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட தேவபூஜா பத்ததி. இப்போதும் ஸ்வாமிகள், அந்த பிருந்தாவனங்களில் இருந்துகொண்டு, தனது பக்தர்களுக்கு அருளிக்கொண்டு உள்ளார்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

***

ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் இயற்றிய கன்னட தந்திரசாரம் - ஓர் அறிமுகம்

தந்த்ரம் என்றால் என்ன? 'தமநாதி த்ராயதே சேதி தந்த்ரம்' என்பதே நிருக்தி. 'வெளிப்படுத்துகிறது, காக்கிறது என்பதே தந்த்ரம்'. மந்த்ரம் என்றால் மனனத்தால் காப்பது என்று பொருள். அதை மனதில் திரும்பத்திரும்ப நினைக்கிறோமோ, அதுவே மந்திரம். மந்திரம் எதை வெளிப்படுத்துகிறதோ, அதை முறைப்படி தெரிந்துகொண்டு செய்வதே தந்திரம்.

தந்திரங்களில் பல வகைகள் உண்டு. பாஞ்சராத்ர வைஷ்ணவ தந்த்ரம், வைகானஸ வைஷ்ணவ தந்த்ரம், சைவ தந்த்ரம், சாக்த தந்த்ரம் என இப்படி பல விதமான தந்த்ரங்கள் வெவ்வேறு தெய்வ உபாசனைகளுக்காக உள்ளன.

அந்த தந்த்ரசார நூல்களில், பல தெய்வங்களின் மந்த்ரங்கள், அதை ஜெபிக்கும் முறை, ஜெபிப்பதற்கு முன்னும் பின்னும் செய்யவேண்டிய க்ரியைகள், மந்திரங்களின் மகத்துவங்கள், பெருமைகள், சிலை வழிபாடு முறைகள், கோயில்கள் கட்டும் முறை, உற்சவம் செய்தல், பூஜை செய்தல் போன்ற பல விஷயங்கள் கூறப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட ஒரு பெரிய 'தந்த்ர சரம்' என்னும் கிரந்தத்தை பகவந்தனே, ஸ்ரீஹயக்ரீவ ரூபத்தில் செய்து, நான்முக பிரம்மனுக்கு உபதேசித்தார் என்று வேதாகமங்கள் சொல்கின்றன. அந்தகோ! அந்த நூல் இந்த உலகில் இப்போது காணப்படுபவதில்லை.

நான்முகக் கடவுளுகு இணையான சக்தி, பலம், ஞானம், பக்தி ஆகியவற்றைக் கொண்டுள்ள ஸ்ரீமுக்யபிராணரான வாயுதேவர், மதவ அவதாரம் செய்தபோது, சம்ஸ்கிருத மொழியில் அந்த மூல 'தந்த்ரசாரத்தை' அடியொற்றி, 'தந்த்ரசார சங்க்ரஹம்' (தந்த்ரசார சுருக்கம்) என்னும் கிரந்தத்தை நான்கு அத்தியாயங்களில், 402 ஸ்லோகங்களில் இயற்றியுள்ளார். அதில் எட்டு மந்திரங்கள் (அஷ்ட மஹா மந்திரங்கள்), தேவபூஜை விதானங்கள், கலசபூஜை செய்யும் முறை, ஹோமங்கள் செய்யும் முறை, ஹோமகுண்டங்கள் இவைகளை அமைக்கும் பிரிவுகள், முறைகள், நைவேத்திய சமர்ப்பண விதிகள், சிலைகள் வடிக்கும் கலை, சிலைகள் எந்த லட்சணங்களுடன் இருக்க வேண்டும், கோவில்கள் எப்படி நிர்மாணிக்க வேண்டும், பிரதிஷ்டை முறைகள், உற்சவங்கள், அதன்பின், அனைத்து தெய்வங்களின் மந்திரங்கள், அவற்றை ஜெபிக்கும் முறைகள் ஆகியவற்றை சொல்லி, கடைசியில் அந்த நூலின் பயன்களைக் கூறியுள்ளார்.

அந்த கிரந்தமானது, மாத்வர்களுக்கு மிகவும் பொக்கிஷமான நூல். அதை அனுசரித்தே, மாத்வ கோயில்கள், மடங்களில் பூஜை புனஸ்காரங்கள் நடக்கின்றன. இதைப்போல, வெவ்வேறு இந்து பிரிவுகளுக்கும், அவர்களுக்கே உரிய தந்த்ர முறைப்படியே வழிபாடுகள் நடத்தி வருகிறார்கள்.

ஸ்ரீஜகன்னாததாசர், தமது குருவான ஸ்ரீவரதேந்திர ஸ்வாமிகளிடம், இந்த தந்த்ரசார சங்க்ரஹத்தை பேசுமொழியான கன்னடத்தில் இயற்றும்படி கேட்டுக் கொண்டார். அதற்காக, ஸ்ரீஸ்வாமிகளும், 29 சிறிய செய்யுட்களில், இந்த கன்னட தந்த்ரசாரத்தை கிருதி வடிவில், மத்யமாவதி ராகத்தில் இயற்றினார். ஸ்ரீமத்வாசார்யரின் சம்ஸ்கிருத 'தந்த்ரசார சங்க்ரஹத்தின்' முதல் இரு அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு, இதனை ஸ்வாமிகள் இயற்றியுள்ளார்.

இந்த செய்யுட்களில் அஷ்ட மஹா மந்திரங்கள், அவை வெளிவந்த விவரம், அதன் பெருமைகள் மற்றும் சில விளக்கங்கள் மட்டும் கூறப்பட்டுள்ளன.

இந்த 'ப்ராக்ருத தந்த்ரசாரம்' எனக்கு சமீபத்தில் கிடைத்தது. இதில் ஸ்ரீமத்வாசார்யர் தந்த்ரசாரத்தில் கூறியதை எவ்வளவு எளிமையாக, சுருக்கமாக ஸ்ரீவரதேந்திர ஸ்வாமிகள் கூறியுள்ளார் என்பதை பார்க்கலாம்.

நான் என் சிற்றறிவுக்கேற்ப, மூல பத்யங்கள், தமிழ் மொழிபெயர்ப்பு, சில கடின பதங்களின் விளக்கங்கள் மற்றும் விரிவுரை, அது சம்ஸ்கிருத மூலத்தில் எப்படி உள்ளது என்பதை மிகச் சுருக்கமாக தொகுத்துக் கொடுத்துள்ளேன். குற்றங்கள், குறைகள், இலக்கண தவறுகள் இருந்தால், அவை அடியேனின் அறியாமை என்றறிந்து, மன்னிக்கவும். ஏதாவது, நல்லது காணப்பட்டால், அவை குருராஜரின் கருணை என்று உணர்ந்து, என்னை ஆசிர்வதியுங்கள்.

இப்படிக்கு
ஹரிதாச பாத பாம்ஸு
குரோம்பேட்டை R. ஸ்ரீதரன்

ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் இயற்றிய
கன்னட தந்த்ரசார சங்க்ரஹத்தின்
விளக்க உரை

ஸ்ரீஸ்ரீ வசுதேந்திர தீர்த்த கரகமல சஞ்சாத
ஸ்ரீஸ்ரீ வரதேந்திர தீர்த்த க்ருத ப்ராக்ருத தந்த்ர சார ||

ஸ்ரீஸ்ரீ வசுதேந்திர தீர்த்தரின் திருக்கர தாமரையில் தோன்றிய
ஸ்ரீஸ்ரீ வரதேந்திர யோகி இயற்றிய கன்னட தந்த்ர சாரம்.

***

பாஹி பங்கேருஹேக்ஷண சர்வகாமத[3]
பாஹி பத்[4]மாலய நிகே[1]தன ஸதா[3] ||பல்லவி

காப்பாய் தாமரைக் கண்ணா, எல்லாம் அருள்பவரே,
காப்பாய் திருமகள் வாழ் மார்ப, எப்போதும் ||

ஸ்ரீவரதேந்திர தீர்த்த யோகி, நூல் ஆரம்பத்தில், இறைவனை 'கடவுள்பா' வடிவில், பல்லவியில் துதிக்கிறார். எந்த நூல் இயற்றும்போதும், அது நன்றாக முடிய வேண்டும் என்றும், எந்த தடைகளும் இடையில் வரக்கூடாது என்பதற்காக, 'கடவுள்பா' படைக்கும் வழக்கம் பல காலமாக உள்ளது. அதுவே இங்கும் செய்யப்பட்டுள்ளது.

ஆண்டவனை காப்பாற்று என்று இறைஞ்சுகிறார். பங்கேருஹேஷண என்றால் தாமரைக் கண்ணன் என்று பொருள். சர்வகாமத - இஹ பரங்களில் உள்ள அனைத்து சுகங்களையும் அருள்பவன் என்று பொருள். பத்மாலய நிகேதன என்றால் தாமரையில் வசிக்கும், அல்லது, தோன்றிய இலக்குமியை, தன் மார்பில் தரித்தவன் - ஸ்ரீனிவாசன் என்று பொருள்.

தாமரையில் தோன்றிய பிரம்மன், இறைவனின் நாபியை தன் இருப்பிடமாகக் கொண்டுள்ளார். ஆகையால், இது பிரம்மனின்

துதியும் ஆகும். இந்த தந்த்ரசாரத்தை ஸ்ரீஹரி, பிரம்மனுக்கு உபதேசம் செய்துள்ளார்.

ஆகையால், நூலாசிரியர், ஸ்ரீஹரி மட்டும் துதிக்காமல், ஸ்ரீதேவி, பிரம்மன் இவர்களையும் மறைமுகமாக, தாரதம்ய ரீதியில் துதித்தது போற்றத்தக்கது. இதையே அடுத்த பாடலில் மேலும் விவரிக்கிறார். இதுவும் ஹரித்துதியே. அடுத்த பாடலும் ஹரித்துனியே. இவற்றில் இதர தெய்வங்களும், மறைமுகமாக தாரதம்ய முறையில் துதிக்கப்படுகிறார்கள்.

ஜயது சதுரானன ப[4]வேந்த்[3]ராதி[3] வினுத
ஜயது சதுரானன ரமாவல்லபா[4] |
ஜயது ஸம்பூர்ண சித்ஸுகமுக[2] ஸுகு[3]ண நிலய
ஜயது ஜன்மாதி[3] காரண தோ[3]ஷஹா ||1

வெற்றி, நான்முகன், சிவன், இந்திரன் இவர்களால் துதிக்கப்பட்டவனே
வெற்றி, நான்முகன், இலக்குமி இவர்களின் நாயகனே
வெற்றி, முழுமுடல் சச்சிதானந்த பண்பு கடல் கடவுளே
வெற்றி, பிறப்பற்றவனே, குறையில்லா ஸ்ரீஹரியே.

ஜயது என்றால் வெற்றி என்று பொருள். சிறப்பாக விளங்குபவன் என்று அதன் தாத்பர்யம். ஸ்ரீஹரி, நான்முக பிரம்மன், சிவன், இந்திரன் போன்ற தேவதைகளால் வணங்கப்படுபவன். அவன், நம்மைப் போன்று ப்ராக்ருத குணம் படைத்தவன் அல்ல. அவனுடைய பண்புகள் அனைத்துமே அப்ராக்ருதமானவை. நம்முடைய மொழிகளால் வர்ணிக்கப்பட முடியாதவன். அவன் பூரணன். முழுமையானவன். அறிவு, இன்பம் போன்றவைகளையே உடலாகக் கொண்டவன். எல்லா நற்பண்புகளின் இருப்பிடம். அனைவரின் பிறப்பு, இறப்பு போன்றவற்றிற்கு காரணமானவன். ஆனால், தான் மட்டும் பிறப்பு இறப்பு அற்றவன். குறையில்லா கோவிந்தன்.

பிறப்பு இறப்பு என்பது ஜீவர்களின் தேகங்களுக்குதானே தவிர, ஆன்மாவுக்கு இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இது கடவுள் வாழ்த்துப்பா. முதலில் செய்ய வேண்டிய கிரியை ஆகும். அதையே கவி இங்கு செய்துள்ளார். இனிமேல், சொல்ல வந்த விஷயத்தை (தந்த்ரசாரத்தை) பார்ப்போம்.

சதுரானன = நான்கு முகங்கள். பவ = சிவன் / ருத்ரன். சித்ஸுக = check.. சுகுண நிலய = நற்பண்புகள் கொண்டவன். ஜன்மாதிகாரண = பிறப்பு ஆகியவற்றிற்குக் காரணன். தோஷஹா = குறைகள் அற்றவன் மற்றும் குறைகளை அழிப்பவன்.

கமலாக்ஷ பரம சம்பி³ரமதி³ந்த³ லகுமிகர
கமலதி³ம் ஸேவெகொளுதிரலு ஆக³ ।
அமரநிகராராத்⁴ய கமலாஸனனு ப³ந்து³
நமிஸி பி³ன்னயிஸித³னு தன்ன பி¹த¹கெ³ ।।2

கமலக்கண்ணனான ஸ்ரீஹரி மிகவும் உற்சாகத்துடன் இலக்குமியின் கரகமலங்களால் சேவை கொண்டிருக்கும்போது, அமர சந்ததிகளால் கொண்டாடப்படும் பிரம்மன் வந்து வணங்கி, விண்ணப்பம் புரிந்தான், தன் தந்தையிடம்.

இது அவதாரிகைப் பாடல். தாமரை போன்ற கண்கள் உடைய ஸ்ரீஹரி, சம்பிரமத்துடன் இலக்குமியுடன் வைகுண்டத்தில் விளங்கும் வேளையில், தேவக்கூட்டத்தின் தலைவன், தாமரையை பீடமாகக் கொண்ட நான்முக பிரம்மன் வந்து, தன் தந்தையைப் பார்த்து, சில கேள்விகள் எழுப்பினார்.

கமலாக்ஷ = தாமரைக் கண்ணன். அமரநிகர = தேவர்கூட்டம். கமலாஸனன் = தாமரை பீடம் = பிரம்மன். பின்னயிஸிதனு = விண்ணப்பித்தான்.

இந்த பின்னணிக்கு ஆதாரம், ஸ்ரீமத்வாசார்யர் இயற்றிய தந்த்ரசார சங்க்ரஹத்தில், அத்தியாயம் 1, ஸ்லோகம் 2ல் உள்ளது.

ஜயத்யப்ஜ பவேஷேந்த்ர வந்தித: கமளாபதி: |
அனந்த விபவானந்த ஷக்திஞானாதி சத்குண: || (1-1)

தாமரையில் உதித்த பிரம்மன், சிவன், இந்திரன் இவர்களால் வணங்கப்பட்ட இலக்குமிபதியான ஸ்ரீஹரி, எண்ணற்ற முழுமையான ஆனந்தம், ஞானம், சக்தி போன்ற பண்புகளால் நிரம்பி, சிறப்பாக விளங்குகிறார்.

விதிம் விதாய ஸர்காதௌ தேன ப்ருஷ்டோப்ஜ லோசன: |
அஹ தேவோ ரமோத்ஸக்ஞ விலஸத் பாதபல்லவ: || (1-2)

தாமரை போன்ற கண்களைப் படைத்த ஸ்ரீஹரி, தன்னுடைய மென்மையான திருவடிகளை ரமாதேவியின் தொடையின் மீது வைத்து ஷோபிக்கிறார். தான் படைத்த பிரம்மதேவனுக்கு, தந்த்ரசாரத்தை, கேள்விகளுக்கு பதிலாக உரைத்தார்.

இதைப் படித்தால், குருநாதர், ஸ்ரீமத்வர் காட்டிய பாதையை, ஸ்ரீஸ்வாமிகள் எப்படி பின்பற்றியிருக்கிறார் என்பதை தெளிவாக அறியலாம். கவியானவர், மூலத்திற்கு அனுசரணையாக எப்படி இதை கன்னடத்தில் எழுதியுள்ளார் என்பதை இதுபோன்ற மேற்கோள்கள் மூலமாக காட்டி, புரியவைக்க முயல்கிறேன்.

தாச சாகித்யம் என்பது மூலகிரந்தங்களின் கன்னட (ப்ராக்ருத) வடிவம்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆவ தே³வோத்தமனு ஆவாவ
கு³ணக³ளிஹுவாவாவ ஷப்த³வாச்யாவரீதி |
ஈ விசாரவனு பேளெனலு நஸுநகு³த
ராஜீவஸம்ப⁴வகெ³ இந்தெந்து³ நுடி³தா³ ||3

அந்த உயர்ந்த கடவுள் யார்? அவனிடம் என்னென்ன பண்புகள் உள்ளன? அவன் எந்தெந்த ஒலிகளால் சொற்களால் துதிக்கப்படுகிறான்? இந்த கேள்விகளுக்கு சரியாக பதில் தருக என்று தந்தையிடம், தாமரையில் பிறந்த பிரம்மன் கேட்டான்.

தேனப்ருஷ்டோ அப்ஜலோசன: என்னும் ஸ்லோகத்தில் கூறியபடி, ஸ்ருஷ்டியின் துவக்கத்தில், பிரம்மன் கேள்வி கேட்க, அதற்கு பதிலாக வந்ததே 'தந்த்ரசாரம்'.

வனஜசம்ப[4]வ கேளு நானே ஸர்வோத்தமனு யனக[3]னந்தானந்த மங்க[3]ளகு[3]ண |
ப்ரணவவாச்யனு நானெ அஷ்டவர்ணோபேத
ப்ரணவத[3] விசாரவனு பேள்வெ நினகெ[3] ||4

தாமரையில் பிறந்த பிரம்மனே, கேட்பாயாக. நான்தான் சர்வோத்தமன். அனைவரிலும் சிறந்தவன். என்னிடம் அனந்தமான (எண்ணிலடங்கா) நற்பண்புகள் உள்ளன. நான் பிரணவத்தால் அறியப்படுபவன். பிரணவம் எட்டு எழுத்துக்களைக் கொண்டது. அதைப்பற்றி உனக்கு கூறுகிறேன் -- என்றார் ஸ்ரீஹரி.

பிரம்மன் கேட்ட கேள்விகள்:
1. தேவர்களில் யார் உயர்ந்தவர்?
2. அவனின் பண்புகள் யாவை?
3. அவன் எந்த ஒலிச் சொற்களால் குறிப்பிடப்படுகிறான்?

இவற்றிற்கான பதில்களாக ஸ்ரீஹரி கூறுபவை:
1. நான்தான் உயர்ந்தான். சர்வோத்தமன்.
2. என்னிடம் எண்ணிலடங்கா நற்பண்புகள் உள்ளன.
3. நான் பிரணவத்தால் அறியப்படுபவன். அந்த பிரணவம் எட்டு எழுத்துக்களைக் கொண்டது.

இதையே ஸ்ரீமத்வர், மூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அஹமேகோऽகில குணோ பாசக: ப்ரணவோ மம |
அகாராத்யதிஷாந்தாந்த: ஸோऽயமஷ்டாக்ஷரோ மத: || (1-3)

நானே அனைத்து கல்யாண குணங்களின் உறைவிடமாக உள்ளேன். பிரணவம் என்னையே குறிக்கிறது. பிரணவம் என்பது

'ஓம்காரமே'. 'ஓம்காரத்தில்', 'அ' முதல் 'அதிஷாந்தம்' வரையில் எட்டு எழுத்துக்கள் உள்ளன.

ஸ்ருஷ்டியில் முதலில் தோன்றிய ஒலியே பிரணவம். பிரணவம் = தார = ஓம்காரம். ஓம் என்றால் பூர்ணம் = முழுமை = விஷ்ணு. ஓம்'ல் எட்டு எழுத்துக்கள் மற்றும் ஒலிகள் உள்ளன. அவை அகாரம், உகாரம், மகாரம், நாதம், பிந்து, கலா அல்லது கோஷம், ஷாந்தம் மற்றும் அதிஷாந்தம் ஆகும். இதில் அ,உ,ம இவை எழுத்துக்கள், மற்றவை ஒலிகள் ஆகும்.

ஸாத³ரதி³ கேளின்னு அகார உகார மகார நாத³ பி³ந்து³ கோ⁴ஷ ஷாந்தாதி¹ஷாந்த¹ |
ஈ தி³வ்ய வர்ணத³லி விஷ்வதைஜஸப்ராக்ஞ மோத³மய துர்யாத்ம அந்தராத்ம ||5

பரமாத்ம ஞானாத்மனெம்ப³ஷ்ட ரூபதி³ந்தி³ருதிஹெனு
வேதா³தி³யலி ஸர்வதா³ |
பரமருஷிக³ளு ஈ மஹாமந்தி³ர
ஜபிஸென்ன புரவனைது³வரு ஸத்வரதி³ந்த³லி ||6

இந்த இரண்டு பாக்களுக்கும் சேர்த்து ஒரேயொரு வினைச்சொல் இருப்பதால், இது குளகம் என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும். ஆகையால், இரண்டிற்கும் சேர்த்து பொருள் மற்றும் விளக்கம் தரப்படுகிறது.

பிரணவத்தில் அகாரம், உகாரம், மகாரம், நாத, பிந்து, கோஷ, ஷாந்த, அதிஷாந்த என்னும் எட்டு சிறந்த வர்ணங்கள் (எழுத்துக்கள்) உள்ளன. அவற்றிற்கு பிரதிபாத்ய தேவதையாக, விஷ்ணுவே எட்டு ரூபங்களில் உள்ளார். அந்த ரூபங்கள், விஸ்வன், தைஜஸன், ப்ராக்ஞன், துர்யன், ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா மற்றும் ஞானாத்மா ஆகும். மறைகள் (வேதங்கள்) ஆகியவற்றில், பெரும் ரிஷிகள் எப்போதும் இந்த மந்திரத்தையே ஜெபிப்பார்கள். அதன் பலனாக, என் உலகமான வைகுண்டத்தை விரைவில் அடைவார்கள்.

ஸ விஷ்வ தைஜஸப்ராக்ஞ துரியாத்மாந்தராத்மனாம் ।
பரமாத்மா ஞானாத்மாயுஜாம் மத்ரூபாணாம் ச வாசக: ॥ (1-4)

பிரணவத்தின் எட்டு எழுத்துக்கள், பகவானின் எட்டு உருவங்களை, எழுத்து, ஒலி வடிவங்களில் தெரியப்படுத்துகின்றன. அந்த பகவானின் எட்டு ரூபங்கள் இவையே. விஸ்வன், தைஜஸன், ப்ராக்ஞன், துர்யன், ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா மற்றும் ஞானாத்மா.

எழுத்து - ஸ்ரீஹரிரூபம்
அகாரம் - விஷ்வன்
உகாரம் - தைஜஸன்
மகாரம் - ப்ராக்ஞன்
நாதம் - துரியன்
பிந்து - ஆத்மா
கோஷம் - அந்தராத்மா
ஷாந்த - பரமாத்மா
அதிஷாந்த - ஞானாத்மா

பிரணவத்தை உச்சரிக்கும்போது இந்த எட்டு உருவங்களை தியானிக்க வேண்டும். சரியாக உச்சரித்தால், வீடுபேறு நிச்சயம் என்கிறார். எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை வல்லுனர்களிடம் கேட்டு கற்றுக் கொள்ளவும். அவசரப்படாமல் உச்சரிக்க வேண்டும்.

வாரிருஹஸம்ப⁴வனே கேளகாரத³லி
ஹதி³னாரு அச்சுக³ளு ஜனிஸித³வு க்ரமதி³ ।
சாரு அஜ ஆனந்த³ இந்த்³ரேஷ
மொத³லாத³ ஈரெண்டு மூர்த்திக³ளு விஷ்வஜனிதா ।।7

தாமரையில் பிறந்தவனே, கேள், அகாரத்திலிருந்து பதினாறு உயிரெழுத்துகள் தோன்றின, முறையாக. அழகிய அஜ, ஆனந்த, இந்திர, ஈஸ முதலான பதினாறு மூர்த்திகள் விஸ்வத்திலிருந்து தோன்றின.

பிரணவம் (ஓம்காரம்): எட்டெழுத்து மற்றும் எட்டு ஸ்ரீஹரி ரூபங்களை நியாமகமாகக் கொண்டன. பிரணவத்தில் உள்ள அகாரத்திலிருந்து, சம்ஸ்கிருத மொழியில் 16 உயிர் எழுத்துக்கள் என்கிற ஸ்வராக்ஷரங்கள் அல்லது 'அச்' எழுத்துக்கள் தோன்றின. அந்த பதினாறு எழுத்துகளுக்கும் அபிமானி தேவதைகளான அஜ, ஆனந்த, இந்திர, ஈஸ முதலிய ஸ்ரீஹரி ரூபங்கள், விஸ்வ என்னும் ஸ்ரீஹரியின் வடிவத்திலிருந்து தோன்றின. ஆவிர்பாவம் ஆயின என்று கவி கூறுகிறார்.

இதற்கான ஆதாரம், மூல நூலில் இப்படி உள்ளது.
தத்ரூப பேதா: பஞ்சாஷன் மூர்த்தயோ மம சாபரா: |
பஞ்சாஷத் வர்ண வாச்யாஸ்தா வர்ணாஸ்தாரார்ண பேதிதா: || (1-5)

பிரணவம், பகவந்தனின் எட்டு ரூபங்களை பிரதிபலிக்கிறது. விஸ்வ, தைஜஸ போன்ற எட்டு ரூபங்களிலிருந்து 'அஜாதி' 50 ரூபங்கள் அபிவியக்தமாயின. அந்த 50 உருவங்கள், சம்ஸ்கிருத மொழியில் உள்ள 50 எழுத்துக்களின் பிரதிபாத்ய ரூபங்களை பிரதிபலிக்கிறது. விஷ்ணுவின் 'அஜாதி' 50 ரூபங்கள்கூட பிரணவத்திலிருந்து தோன்றியவையே.

16 உயிர் எழுத்துக்கள் பிரணவத்தின் முதல் எழுத்தான 'அ'விலிருந்து தோன்றியது. அவை விஷ்வமூர்த்தி ரூபத்தைக் குறிக்கின்றன.

உயிர் எழுத்துக்கள் மற்றும அவற்றின் பகவத்ரூபங்களின் பெயர்கள் பின்வருமாறு.

அ- அஜ; ஆ- ஆனந்த; இ- இந்திர; ஈ- ஈஸ; உ- உக்ர; ஊ-ஊர்ஜ; ரு- ருதம்பர; ரூ - ரூக; ல்ரு- ல்ருஸ; ல்ரூ- ல்ரூஜ; ஏ- ஏகாத்மா; ஐ- ஐர; ஓ-ஓஜப்ருத்; ஔ- ஔரஸ; அம்= அம்ன; அ:- அர்த்தகர்ப்ப;

இந்த 16 'அச்' எழுத்துக்கள், ஸ்ரீஹரி ரூபங்களை இந்த நுடியில் கூறியுள்ளார்.

உம நாத³ பி³ந்து³ கோ⁴ஷக³ளிந்த³ கசடதப விமலவர்க்க³க³ளு
புட்டித³வு ஐது³ ।
கமஸலம்ப⁴வ கேளு தைஜஸ ப்ராக்³ஞ
துர்யாத்மாந்தராத்ம மூர்த்திக³ளிந்த³லி ।।8

உகார, மகார, நாத, பிந்து, கோஷங்களிலிருந்து க,ச,ட,த,ப என்னும் ஐந்து பிரிவுகள் பிறந்தன. பிரம்மனே, கேள்! அவற்றின் தெய்வங்கள், தைஜஸ, ப்ராக்ஞ, துர்ய, ஆத்மா, அந்தராத்ம, ஆகும். அவர்களிடமிருந்து இந்த ஐந்து பிரிவுகள் தோன்றின.

க என்பது தமிழில் ஒன்று மட்டுமே உள்ளது. இதர மொழிகளில் க-வர்க்கம், க-பிரிவில் ஐந்து எழுத்துக்கள் உள்ளன. க1,க2,க3,க4,ங என்று இந்த ஐந்து எழுத்துக்கள் 'உ'விலிருந்து தோன்றின. உ-க்கு ஹரிரூபம் - தைஜஸ.

ச என்பது தமிழில் ஒன்று மட்டுமே உள்ளது. இதர மொழிகளில் ச-வர்க்கம், ச-பிரிவில் ஐந்து எழுத்துக்கள் உள்ளன. ச1,ச2,ச3,ச4,ச5 என்று இந்த ஐந்து எழுத்துக்கள் 'ம'விலிருந்து தோன்றின. ச-க்கு ஹரிரூபம் - ப்ராக்ஞ.

ட என்பது தமிழில் ஒன்று மட்டுமே உள்ளது. இதர மொழிகளில் ட-வர்க்கம், ட-பிரிவில் ஐந்து எழுத்துக்கள் உள்ளன. ட1,ட2,ட3,ட4,ட5 என்று இந்த ஐந்து எழுத்துக்கள் 'ம'விலிருந்து தோன்றின. ட-க்கு ஹரிரூபம் - துர்ய.

அதேபோல, த என்பது தமிழில் ஒன்று மட்டுமே உள்ளது. இதர மொழிகளில் த-வர்க்கம், த-பிரிவில் ஐந்து எழுத்துக்கள் உள்ளன. த1,த2,த3,த4,த5 என்று இந்த ஐந்து எழுத்துக்கள் 'பிந்து'விலிருந்து தோன்றின. த-க்கு ஹரிரூபம் - ஆத்மா.

அதேபோல, ப என்பது தமிழில் ஒன்று மட்டுமே உள்ளது. இதர மொழிகளில் ப-வர்க்கம், ப-பிரிவில் ஐந்து எழுத்துக்கள் உள்ளன. ப1,ப2,ப3,ப4,ப5 என்று இந்த ஐந்து எழுத்துக்கள் 'கலா' அல்லது 'கோஷ'விலிருந்து தோன்றின. ப-க்கு ஹரிரூபம் - அந்தராத்மா.

இந்த வெவ்வேறு ஹரிரூபங்களுக்கு ஸ்வரூபத்தில் எந்த பேதமும் (வேற்றுமையும்) கிடையாது. ஆனால் 'விசேஷ' என்னும் ஒரு தத்வத்தால் வெவ்வேறாவை போன்று தெரிகின்றன. இவற்றை தத்வசாஸ்திரத்தில் 'ஸவிசேஷ அபேதம்' என்கிறோம்.

மெய் எழுத்துக்களில் உள்ள முதல் ஐந்து பிரிவுகளான, க பிரிவு, ச, ட, த, ப பிரிவுகள் இவற்றில் உள்ள 25 எழுத்துக்கள், உகார, மகார, பிந்து, நாத, கோஷ இவற்றிலிருந்து தோன்றின என்றும், இவை, தைஜஸ, ப்ராக்ஞ, துர்ய, ஆத்மா, அந்தராத்மா என்கிற ஹரிரூபங்களிலிருந்து தோன்றின என்றும் கூறியுள்ளார்.

இந்த 25 எழுத்துக்களுக்கும் கபில முதற்கொண்டு, மனு வரையில் 25 ரூபங்கள் உள்ளன. அவற்றை சம்ஸ்கிருத மூலத்தில் பார்க்கலாம். இடம் கருதி இங்கு கொடுக்கவில்லை.

பஞ்சவிம்ஷதிரூப அபி⁴வ்யக்தவாத³வு விரிஞ்சி
கேள் ஷாந்ததி³ம் யரலவக³ளு ।
ஸஞ்சிந்திஸுவுது³ அதிஷாந்ததி³ம்
ஷஷஸஹள பஞ்சாக்ஷரங்க³ளு ஜனிஸித³வு இல்லி ।।9

மேலே கூறிய 25 எழுத்துக்களும் அபிவ்யக்தமானது. அதாவது, வெளிப்படையாகத் தோன்றியது (உ,ம, நாத, பிந்து, கோஷ இவைகளிடமிருந்து). பிரம்மனே, கேள், சாந்தம் என்கிற வர்ணத்தால், ய,ர,ல,வ ஆகியவை தோன்றின. அதிஷாந்தம் வர்ணத்தால் ஷ1, ஷ2, ஸ, ஹ, ள என்னும் ஐந்து எழுத்துக்கள் தோன்றின.

மெய்யெழுத்தில் 25 எழுத்துக்களை பார்த்தோம். இப்போது மீதம் இருக்கும் 9 எழுத்துக்களைப் பற்றி கூறுகிறார்.

ஷாந்தம் - ஒலி எழுத்திலிருந்து ய,ர,ல,வ என்னும் எழுத்துக்கள். அதிஷாந்தம் - ஒலி எழுத்திலிருந்து ஷ1, ஷ2, ஸ, ஹ, ள ஆகியவை வெளிப்பட்டன என்கிறார். இப்படியாக, 'ஓம்' என்பதில்

உள்ள 'அ'விலிருந்து, 'அ' முதல் 'அ:' வரை உள்ள 16 உயிரெழுத்துக்கள் தோன்றின.

உ-விலிருந்து - க வர்க்கம் தோன்றியது.
ம-விலிருந்து - ச வர்க்கம் தோன்றியது
நாதம்- இதிலிருந்து - ட வர்க்கம் தோன்றியது
பிந்து- இதிலிருந்து - த வர்க்கம் தோன்றியது
கோஷம்- இதிலிருந்து - ப வர்க்கம் தோன்றியது
ஷாந்த- இதிலிருந்து - ய வர்க்கம் தோன்றியது
அதிஷாந்த- இதிலிருந்து - ஷ1 ஷ2 ஸ ஹ ள தோன்றியது

ஆக, பிரணவத்தின் எட்டு வர்ணங்களிலிருந்து 50 எழுத்துக்கள் தோன்றின. இவைகளுக்கு உள்ள பிரத்யேக ஹரிரூபங்களை இங்கு இடம் கருதி கொடுக்கவில்லை. விருப்பமுள்ளவர்கள் என்னுடைய 'தந்த்ரசார சங்க்ரஹம்' முதல் பாகம், முதல் அத்தியாயத்தை படிக்கலாம்.

பரமாத்ம ஞானாத்ம ரூபதி³ந்தொ³ம்ப³த்து
நிருபமஸ்வமூர்த்திக³ளு ஷோபி⁴ஸித³்வு ।
பரமேஷ்டி நாராயணாஷ்டாக்ஷரா மந்த்ர
பொரெவெ நினகா³னு ஸாங்கோ³பாங்க³தி³ம் ।।10

பரமாத்மா, ஞானாத்ம ரூபங்களிலிருந்து ஒன்பது உவமையற்ற ஹரிமூர்த்திகள் அபிவியக்தமாயின. பிரம்மாவே! நாராயண அஷ்டாக்ஷர மந்திரத்தை கூறுவேன். உனக்கு நான், அங்கங்களுடன் விரிவாக.

பரமாத்மா ரூபத்திலிருந்து, ஷாந்தத்திலிருந்து, ய,ர,ல,வ என்னும் நான்கு எழுத்துக்களும், ஞானாத்ம ரூபத்திலிருந்து, அதிஷாந்தத்திலிருந்து ஷ1, ஷ2, ஸ, ஹ, ள என்னும் ஐந்து எழுத்துக்களும் வெளிப்பட்டன. இந்த ஒன்பது எழுத்துக்களும் பிரத்யேக ஹரிரூபங்கள் என மூலத்தில் கூறப்பட்டுள்ளது. ய,ர,ல,வ ஆகிய எழுத்துக்களுக்கு யக்ஞ, ராம, லட்சுமிபதி, வர என்னும் உருவங்கள் கூறப்பட்டுள்ளன. ஷ1, ஷ2, ஸ, ஹ, ள

ஆகியவற்றிற்கு ஷாந்த ஸம்வித, ஷட்குண, ஸாராத்ம, ஹம்ஸ, ளாளுக ஆகிய உருவங்கள் கூறப்பட்டுள்ளன.

இப்படியாக, ஓம்காரத்திலிருந்து தோன்றிய 50 எழுத்துக்களையும், அவற்றின் பிரதான தேவதைகளின் பெயர்களையும் தெரிவித்த பின்பு, பிரம்மாவிற்கு நாராயண அஷ்டாக்ஷர மந்திரத்தின் எழுத்துக்கள் தோன்றிய விதத்தை, விரிவாகக் கூறுகிறேன் என்கிறா விஷ்ணு. 'ஓம் நமோ நாராயணாய' என்பதே நாராயண அஷ்டாக்ஷர மந்திரம். இந்த மந்திரமும் பிரணவத்திலிருந்து எப்படி தோன்றின என்பதை விளக்குகிறார்.

இதற்கு ஆதார ஸ்லோகம், தந்த்ரசாரத்தில் (1-11) இவ்வாறு உள்ளது.

நாராயணாஷ்டாக்ஷரஸ்ச தாராஷ்டாக்ஷர பேத வான் ।
அத்யைஸ்தார சதுர்வர்ண்யைர் பின்னா வ்யாஹ்ருதய: க்ரமாத் ॥

பிரணவத்தின் எட்டு எழுத்துக்களிலிருந்து முறையாக நாராயண அஷ்டாக்ஷரத்தின் எட்டு எழுத்துக்கள் தோன்றியுள்ளன. அதைப் போல, பிரணவத்தின் முதல் நான்கு எழுத்துக்களிலிருந்து முறையே நான்கு வியாஹ்ருதிகள் தோன்றியுள்ளன.

ஸாங்கோ பாங்கம் என்பது கீழ்க்கண்ட விளக்கமே

பிரணவத்தின் 8 எழுத்துக்கள்	நாராயண அஷ்டாக்ஷர மந்திரத்தின் 8 எழுத்துக்கள்
அகாரம், உகாரம், மகாரம், நாதம், பிந்து, கலா (கோஷம்), ஷாந்த, அதிஷாந்த	ஓம், ந, மோ, நா, ரா, ய, ணா, ய
பிரணவத்தின் 8 எழுத்துக்கள்	வியாஹ்ருதிகள்
அகாரம், உகாரம், மகாரம், நாதம்	பூர், புவ: ஸ்வ:, பூர் புவ: ஸ்வ:

தாரக³த அஷ்டவர்ணக³ளிந்த³ ஓம் நமோ
நாராயணாய எம்பி³ மந்த்ரவு ।
சாரு அஷ்டார்ண தத்வாச்ய மூர்த்திக³ளுண்டு
ஸார விஷ்வாதி³ ப்ரணவஸ்த² பி⁴ன்ன ।।11

தார என்றால் பிரணவம். அதாவம் 'ஓம்' சப்தம். அது எட்டு வர்ணங்கள் / ஒலிச்சொற்களைக் கொண்டது. அந்த எட்டெழுத்துக்கள் மூலமாக 'ஓம் நமோ நாராயணாய' என்னும் அஷ்டாக்ஷர மந்திரம் தோன்றியது. அந்த எட்டு எழுத்துக்களுக்கும் விஷ்வ, போன்ற மூர்த்திகள் (பிரணவத்தை தவிர்த்து) பிரத்யேமாக உள்ளன.

சென்ற பாடலில் கூறியதைப் போல, அகார, உகார, மகார, நாத, பிந்து, கோஷ, ஷாந்த, அதிஷாந்த ஆகிய பிரணவ எட்டெழுத்துக்கள் மூலமாக - ஓம், ந, மோ, நா, ரா, ய, ணா, ய என்னும் அஷ்டாக்ஷர மந்திரம் பிறந்தது. இந்த எழுத்துக்களுக்கு உரிய நாராயண ரூபங்கள், விஷ்வ, தைஜஸ, ப்ராக்ஞ, துர்ய, ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா மற்றும் ஞானாத்மா ஆகும். பிரணவ ப்ரதிபாத்ய எட்டு ரூபங்களே இங்கேயும் அதே பேரில் ப்ரிஅதிபாத்யமாக உள்ளன. இப்படியாக, அஷ்டாக்ஷர மஹா மந்திரத்தின் மகிமை கூறப்பட்டு விட்டது. அடுத்து சில வேறு மந்திரங்களைப் பற்றி கூறுகிறார்.

ஓம் பூ⁴: ஓம் பு⁴வ: ஓம் ஸுவ: ஓம் எம்ப³
ஓம்பூ⁴ர்பு⁴வஸ்வ: ஈ வியாஹ்ருதி ।
அம்பு³ஜோத்ப⁴வ ப்ரணவாதி³ நால்வர்ணதி³ம்
ஸம்ப⁴விஸிதீ³ மந்த்ர ஸுலப⁴தி³ந்தா³ ।।12

ஓம் பூ: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் பூர்புவஸ்ஸுவ: என்னும் இந்த நான்கு வர்ணங்கள்தான் வியாஹ்ருதி எனப்படும். இந்த நான்கு வர்ணங்களும் பிரணவத்தின் நான்கு எழுத்துக்கள் மூலம் தோன்றின. தாமரையில் தோன்றிய பிரம்மனே, இவற்றைப் பற்றி சுலபமாக தெரிந்து கொள்.

அகாரத்திலிருந்து ஓம் பூ:
உகாரத்திலிருந்து ஓம் புவ:
மகாரத்திலிருந்து ஓம் ஸுவ:
நாதத்திலிருந்து ஓம் பூர்புவஸ்ஸுவ:

என்கிற நான்கு எழுத்துக்கள் உள்ள வியாஹ்ருதி மந்திரம் தோன்றியது.

பிரணவம் என்பது ஒரு மந்திரம். அதில் எட்டு எழுத்துக்கள் - அ,உ,ம், நாத, பிந்து, கோஷ, ஷாந்த, அதிஷாந்த - ஆகியவை உள்ளன. வியாஹ்ருதி என்பது ஒரு மந்திரம். அதில் நான்கு எழுத்துக்கள் - ஓம் பூ:, ஓம் புவ:, ஓம் ஸுவ:, ஓம் பூர்புவஸ்ஸுவ: - உள்ளன. நாராயண அஷ்டாக்ஷர மந்திரம் எப்னது ஒரு மந்திரம். அதில் - ஓம், ந, மோ, நா, ரா, ய, ணா, ய - என்னும் எட்டு எழுத்துக்கள் உள்ளன. இவையே இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

தனய கேளி மந்த்ரக³த நால்கு ரூபக³ளு
அனிருத்³த⁴ ப்ரத்³யும்ன சங்கர்ஷணா ।
அனக⁴ ஸ்ரீவாசுதே³வன மூர்த்திக³ளு
சிந்தனெ மாடு³ ஈ வ்யாஹ்ருதியலி பி³ட³தே³ ||13

மகனே! கேள். இந்த மந்திரத்தில் உள்ள நான்கு ரூபங்கள் - அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண மற்றும் குறையற்ற ஸ்ரீவாசுதேவன். இந்த நான்கு மூர்த்திகளை, இந்த வியாஹ்ருதியில் விடாமல் சிந்தனை செய்.

ஓம் பூ: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் பூர்புவஸ்ஸுவ: என்பதே வியாஹ்ருதி மந்திரத்தின் நான்கு வர்ணங்கள். இவற்றின் பிரதிபாத்ய தேவதைகள் அல்லது ஹரிரூபங்கள்: அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண மற்றும் வாசுதேவ ஆகும். இவற்றை சிந்தியுங்கள்.

தந்த்ரசார (1-12) மூலம் இவ்வாறு கூறுகிறது:
அனிருத்தாதி காஸ்தாஸாம் தேவதா வ்யுத்க்ரமேண வா ।
தாஷ்சதுர் மூர்த்த்தயஸ்த்யேவ த்வாதஷார்ண பதோதிதா: ॥

அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண மற்றும் வாசுதேவ ஆகிய ஹரிரூபங்கள், நான்கு வியாஹ்ருதிகளை பிரதிபாதிக்கின்றன. அல்லது இதற்கு நேற்மாறான, தலைகீழான ரூபங்கள், நான்கு வியாஹ்ருதிகளையும் பிரதிபாதிக்கின்றன. (வாசுதேவ, சங்கர்ஷண, பிரத்யும்ன, அனிருத்த ரூபங்கள் என்பது போல). இந்த நான்கு ரூபங்களே ஸ்ரீவாசுதேவ 12 எழுத்து மந்திரத்தின் நான்கு பாதங்களையும் பிரதிபாதிக்கின்றன.

ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்பதே வாசுதேவ 12 மந்திரமாகும். (த்வாதச அக்ஷர மந்திரம்).

வியாஹ்ருதிகள் - வாசுதேவ 12 எழுத்து மந்திர பாதங்கள்.

பூ: - ஓம்
புவ: - நமோ
ஸ்வ: (ஸுவ:) - பகவதே
பூர்புவஸ்வ: (ஸுவ:) - வாசுதேவாய
(இதன் பாடல் அடுத்ததாக வருகிறது).

கிருஹஸ்தன் வியாஹ்ருதிகளை ஜெபிக்கும்போது, வாசுதேவ, சங்கர்ஷண, பிரத்யும்ன, அனிருத்த என்று நினைக்க வேண்டும். சன்னியாசிகள், அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண மற்றும் வாசுதேவ உருவங்களை நினைக்க வேண்டும் என்று ஓர் உரையாசிரியர் கூறியுள்ளார். இவை அடுத்த சரணத்தின் விஷயங்கள் ஆகும்.

நிக³மாதி³ மொத³லு நால்வர்ணதி³ம் ஓம் நமோ
ப⁴க³வதே வாசுதே³வாய எம்ப³ ।
யுக³ள ஆரக்ஷராத்மக மந்த்ரப்ரதிபாத்³யனா
ப⁴க³வத்ரூபக³ள பேள்வெ நா நினகெ³ ।।14

மறைகளின் முதல் நான்கு வியாஹ்ருதி எழுத்துக்கள் மூலம் ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்கிற இரட்டை-ஆறு (12) எழுத்துக்கள் கொண்ட, வாசுதேவ மந்திரத்தின் உருவங்களை கூறுவேன் உனக்கு.

(இவை ஏற்கனவே மேலே விவரிக்கப்பட்டு உள்ளன).

கேஷவ நாராயணனு மாத[4]வனு கோ[3]விந்த[3]
க்லேஷனாஷன விஷ்ணு மதுசூத[3]னா |
ஸ்ரீஷ த்ரிவிக்ரமனு வாமன ஸ்ரீத[4]ர
ஹ்ருஷிகேஷாம்பு[3]ருஹனாப[4] தா[3]மோத[3]ரா ||15

கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த; கஷ்டங்களை அழிக்கும் விஷ்ணு மதுசூதனா; திரு, பிரபு, திரிவிக்ரமா, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேஷ, பத்மனாப, தாமோதர - ஆகியவை 12 உருவங்கள் ஆகும்.

ஓம், ந, மோ, ப, க, வ, தே, வா, சு, தே, வா, ய - என்பது 12 எழுத்து மந்திரம். இரண்டு ஜோடி ஆறெழுத்து இதுவே. இதற்கான பிரமாணம் மூலத்தில் (1-13) இவ்வாறு உள்ளது.

நாராயணாஷ்டாக்ஷராச்ச வ்யாஹ்ருதிப்யஸ்ததைவ ச |
வி பேதோ த்வாதஷார்ண்ணானாம் கேஷவாத்யாஸ்ச தேவதா: ||

வாசுதேவ 12 எழுத்து மந்திரமான 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்பது எட்டு எழுத்து நாராயண மந்திரத்திலிருந்தும் (ஓம் நமோ நாராயணாய) மற்றும் நான்கு எழுத்து வியாஹ்ருதி மந்திரத்திலிருந்தும் வெளிப்பட்டுள்ளது. வாசுதேவ மந்திரத்தின் 12 எழுத்துக்கள், தனித்தனியாக கேசவ முதலிய 12 பகவத் ரூபங்களை பிரதிபாதிக்கின்றன.

ஓம் நமோ நாராயணாய + பூ: புவ: ஸ்வ: (8+4=12) - இதுவே த்வாதஷ அக்ஷர மந்திரமான - ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்று வெளிப்பட்டுள்ளது.

வாசுதேவ மந்திரத்தின் கேசவாதி 12
12 எழுத்துக்கள் பகவத் ரூபங்கள்

ஓம் - கேசவ
ந - நாராயண
மோ - மாதவ
ப - கோவிந்த
க - விஷ்ணு
வ - மதுசூதன
தே - த்ரிவிக்ரம
வா - வாமன
சு - ஸ்ரீதர
தே - ஹ்ருஷிகேஷ
வா - பத்மனாப
ய - தாமோதர

த்ரித[1]ய ஆவர்த்தி அஷ்டார்ணதி[3]ம் மூரு
வ்யாஹ்ருதியிந்த[3] த்விஷட[3]க்ஷ ரெரட[3]ரிந்த[3] |
சதுராஸ்ய கேளு கா[3]யத்ரி உத்பன்னவாயிது
கேஷவாதி[3] க்ருஷ்ணாந்தரூபா ||16

மூன்று முறை எட்டெழுத்து மந்திரம் மற்றும் வியாஹ்ருதி மந்திரம்; இரண்டிரண்டு முறை ஆறெழுத்து மந்திரம் - ஹே நான்முகக் கடவுளே கேள். காயத்ரி பிறந்தது. அவற்றிற்கு கேசவ முதற்கொண்டு கிருஷ்ணன் வரையில் 24 ரூபங்கள் அமைந்தன.

இப்போது மூன்றாவது முறை, எப்படி பிரணவத்தின் எட்டெழுத்துக்கள், காயத்ரியை தோற்றுவித்தன என்பதைப் பற்றி கூறுகிறார்.

பிரணவம் - எட்டு எழுத்து. (அ,உ,ம்,நாத, பிந்து, கோஷ, ஷாந்த, அதிஷாந்த).
வியாஹ்ருதி - மூன்று எழுத்து (பூ:, புவ:, ஸ்வ).
பிரணவம் x வியாஹ்ருதி = 8 x 3 = 24.

இன்னொரு முறை:

நாராயண அஷ்டாக்ஷரம் - எட்டெழுத்து; (ஓம் நமோ நாராயணாய).
அது மூன்று முறை (ஆவர்த்தி) சேர்ந்தால், 8 x 3 = 24.

விஷ்ணு மந்திரம் : ஓம் விஷ்ணவே நம:
ஓம், விஷ், ண, வே, ந, ம: - ஆறெழுத்து.
இது இரண்டு இரண்டு முறை சேர்த்தால், 6 x 2 x 2 = 24

காயத்ரி மந்திரம் = 24 எழுத்துக்கள். இவையே காயத்ரியாக ஆனது.

தத், ஸ, வி, துர், வ, ரே, ணி, யம் - 8 எழுத்துக்கள்
பர், கோ, தே, வ, ஸ்ய, தீ, ம, ஹி - 8 எழுத்துக்கள்
தி, யோ, யோ, ந:, ப்ர, சோ, த, யாத் - 8 எழுத்துக்கள்

கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுசூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேஷ, பத்மனாப, தாமோதர, சங்கர்ஷண, வாசுதேவ, பிரத்யும்ன, அனிருத்த, புருஷோத்தம, அதோக்ஷஜ, நாரசிம்ம, அச்யுத, ஜனார்த்தன, உபேந்திர, ஹரி, ஸ்ரீகிருஷ்ண (12+12=24) ஆகிய 24 ரூபங்களும், மேற்சொன்ன 24 எழுத்துக்களை பிரதிபலிக்கின்றன. இதுவே இந்த பத்யத்தில் கூறப்பட்டுள்ளது.

விததவாது³து³ புருஷஸூக்த கா³யத்ரியிந்த³தி¹ஷயதி³
புருஷஸூக்தத³லி வேத³ |
ததிக³ளுதி³ஸித³வு நிக³மாதி³ பிரம்மஸூத்ர
பா⁴ரத பஞ்சராத்ராதி³ ஆக³மக³ளு ||17

காயத்ரி மந்திரத்திலிருந்து புருஷ சூக்தம் வெளிப்பட்டது. அதிசயமாக புருஷ சூக்தத்திலிருந்து வேதராசிகள் உதயமாகின. அவற்றிலிருந்து வேதாந்த நிர்ணாயகமான பிரம்ம ஸூத்ரங்கள், மகாபாரதம், பஞ்சராத்ர ஆகமம் போன்றவை தோன்றின.

பிரணவம் - முதலில் தோன்றிய எழுத்து. அதுவே எட்டெழுத்து ஓம்காரம் ஆகும். அந்த எட்டெழுத்துக்களிலிருந்து 'அ' முதல் 'ள' வரை உள்ள 16 உயிர் எழுத்துக்கள் மற்றும் 34 மெய் எழுத்துக்கள் தோன்றின. அவற்றிலிருந்து, வியாஹ்ருதி, அட்சரங்கள், ஸ்ரீ நாராயண அஷ்டாக்ஷர மந்திரம், ஸ்ரீவிஷ்ணு ஷடக்ஷர மந்திரம், ஸ்ரீவாசுதேவ த்வாதசாக்ஷர மந்திரம் மற்றும் காயத்ரி மந்திரம் (24 எழுத்துக்கள்) ஆகியவை தோன்றின என்று பார்த்தோம்.

அந்த காயத்ரி மூன்று பாதங்களை (அடிகளை) கொண்டது. அவை ஒவ்வொன்றிலிருந்தும் மூன்று வர்க்கங்களைக் கொண்ட புருஷ சூக்தம் வெளிப்பட்டது. மூன்று வர்க்கங்களிலிருந்து, ரிக், யஜுர், ஸாம என்கிற மூன்று வேதங்கள் வந்தன. அவற்றிலிருந்து, பிரம்மஸூத்ரங்கள் (564), மகாபாரதம் (60 லட்சம்), மற்றும் பாஞ்சராத்ர ஆகமங்கள் தோன்றின என்று இந்த பத்யத்தில் ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் கூறுகிறார்.

இதற்கு ஆதாரம் மூல தந்த்ர ஸாரத்தில் 1-15, 1-16 ஸ்லோகங்களைக் காணலாம்.

சதுர்விம்ஷன் மூர்த்தயோऽஸ்யா: கதிதா வர்ண்ண தேவதா: |
தத்பேத: பௌருஷம் ஸூக்தம் வேதா: புருஷ ஸூக்த கா: ||15

24 மூர்த்திகளைக் கொண்ட காயத்ரியிலிருந்து புருஷ சூக்தமும், அதிலிருந்து மூன்று மறைகளும் வெளிப்பட்டன.

வைதிகா: ஸர்வ ஷப்தாஸ்ச தஸ்மாத் ஸர்வாபிதோ ஹ்யஹம் |
பஞ்சாஷத் வர்ண பின்னாஸ்ச ஸர்வ ஷப்தா அதோऽபி ச ||16

அனைத்து வைதிக வாங்க்மய சப்தங்கள் மற்றும் இலக்கியங்கள், வார்த்தைகள், புராணம் போன்றவை வேதங்களிடமிருந்துதான் தோன்றியுள்ளன. இந்த அனைத்து சப்தங்களாலும், ஹரியே சுட்டிக் காட்டப்படுபவர் ஆகிறார். அனைத்து 50 வர்ணங்களும் ஆண்டவனையே குறிப்பிடுகின்றன.

அனைத்து சொற்களும், ஒலிகளும், ஸ்ரீஹரியையே குறிப்பிடுகின்றன. இவை அனைத்தும் பிரணவத்தை மூலமாகக் கொண்டுதான் தோன்றியுள்ளன. ஆகையால், பிரணவத்தைக் கொண்ட வேதராசியானது 'ஜடோத்தமம்' (ஜடப் பொருட்களிலில் சிறந்தது) எனப்படுகிறது. மற்றும் வேதத்தை அபௌருஷேயம் என்கிறோம். இதையே பிரம்மஸூத்ரத்தின் முதல் அத்தியாயம் தெளிவுபடுத்துகிறது.

ஷதகோடி மூலராமாயண புராணக³ளு ஸ்ம்ருதி
ஸமூஹக³ளுபபுராணக³ளு ||
இதர வைதி³கஸூக்த (வேதோக்த) ஷப்³த
ஜனிஸித³வு ஸந்ததவாச்ய நானே ஸந்தே³ஹவில்ல ||18

நூறு கோடி ஸ்லோகங்களைக் கொண்ட மூலராமாயண, புராணங்கள், ஸ்ம்ருதிகளின் கூட்டம், உப புராணங்கள் மற்றும் வேத சம்பந்தமான நற்சப்தங்கள் ஜனித்தன. எப்போதும் அவற்றால் குறிப்பிடப்படுகிறவன் நான்தான். சந்தேகம் வேண்டாம். (இவ்வாறு பகவான், பிரம்மனிடம் கூறினார்).

மூலராமாயணம் என்பது இப்போதுள்ள அனைத்து ராமாயணங்களுக்கும் ஆதார நூலாகும். அது ஹயக்ரீவ ரூப இறைவனால் இயற்றப்பட்டது. அதில் நூறு கோடி ஸ்லோகங்கள் உள்ளன. வேதவியாசரால் இயற்றப்பட்ட 18 புராணங்கள் (4 லட்ச ஸ்லோகங்கள்), 18 உப புராணங்கள், அவருடைய சிஷ்யர்கள், பிரதி சிஷ்யர்கள் மூலம் இயற்றப்பட்ட ஸ்ம்ருதி சப்த கூட்டங்கள் மற்றும் அனைத்து வித, ஒலி, மொழி, சப்தங்கள் அனைத்துமே முக்கியமாக, பரம்பொருளான ஸ்ரீஹரியையே குறிக்கின்றன என்று மிகவும் தெளிவாக தந்திர ஸாரத்தில் கூறப்பட்டுள்ளது.

அதையே இங்கு நம் குருநாதரும் தெளிவுபடுத்தியுள்ளார். பிரணவம், வியாஹ்ருதி, மாத்ருகா வர்ணங்கள், நாராயண அஷ்டாக்ஷரம், விஷ்ணு ஷடக்ஷரம், வாசுதேவ த்வாதச அக்ஷரம், காயத்ரி, புருஷ சூக்தம், இந்த எட்டும் அஷ்ட மஹா மந்திரங்கள் எனப்படுகின்றன. தினமும் அனைவரும் ஜெபிக்க வேண்டியவை என்று ஸ்ரீமத்வாசார்யர் கூறியுள்ளார்.

உத³யிஸுவ ரவியவோல்காந்தி ஞானானந்த³
மொத³லாத³ தி³வ்ய கு³ண மய ஷரீரா ।
ஸுத³ருஷனத³ர க³தா³ம்பு³ஜக³ளாயுத³வெனகெ³
த்ரித³ஷக³ணமயனு ஸர்வேஷ நாம ||19

உதிக்கும் ஞாயிறை மீறும் காந்தியுள்ளவன். ஞானம், ஆனந்தம் முதலிய சிறந்த பண்புகளையே தேகமாகக் கொண்டவன். சுதர்ஸன சக்கரம், சங்கு, கதை, தாமரை என்னும் ஆயுதங்களை தரித்தவன். நான் தேவதேவோத்தமன். அனைவரின் ஈசன். இப்படியாக தன்னைப் பற்றிய விஷயத்தை ஸ்ரீஹரி பிரம்மனுக்கு தெரிவித்தார்.

த்ரிதஷ என்றால் தேவர்கள். தேவர்களிடம் உள்ள அனைத்து பண்புகளைக் காட்டிலும், உயர்ந்த ஞான, ஆனந்த முதலிய பண்புகளையே உடலாகக் கொண்டவன் என்று இறைவன் கூறுகிறார். தந்த்ரசாரத்தில் பல இடங்களில் இவை கூறப்பட்டுள்ளன.

ஈ தி³ஷெயலென்ன ஸேவிபரு ஸ்ரீ பூ⁴தே³வி
க்ருத்³தோ⁴ல்க விஷ்வகேஷவ மத்ஸ்யாதி ।
மத்³ரூபக³ணமத்³யக³னு நாம பி³ரம்மபதிபாத்ய
ரதிப⁴க்தி ஸேவ்யனு ஸமர்த்த² ||20

இப்படியாக என்னை வணங்குபவர்கள், ஸ்ரீதேவி, பூதேவி, க்ருத்தோல்க, விஸ்வ, கேஷவ, மத்ஸ்ய போன்ற தன் ரூபங்களில் விளங்குபவனாக அவர்கள் நடுவில் உள்ளேன். பிரம்மன், சேஷாதி

தேவதைகள் மிகவும் பக்தியுடன் என்னை வணங்குகிறார்கள். நான் ஸமர்த்தன்.

இறைவன், தன்னைப் பற்றிக் கூறுகிறான். தந்த்ர ஸாரத்தில் 'ஸ்வ மூர்த்தி கண ஸேவ்ய:' மற்றும் 'ஸ்ரீ பூ ஆலிங்கித' போன்ற பதங்கள், பிரம்மாதி தேவதைகளால் வணங்கப்பட்டவன் என்று கூறுகின்றன. அவற்றையே, குருவானவர் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

தந்த்ர ஸாரம் 1-18, 1-19, 1-20 ஸ்லோகங்களில் இவை பேசப்பட்டுள்ளன.

உத்யத் பாஸ்வத் ஸ்மாபாஸஸ் சிதானந்தைக் தேஹவான் ।
சக்ர ஷங்க கதா பத்மதரோ த்யேயோऽஹமீஷ்வர: ||18
லட்சுமிதராப்யாம் ஆஷ்லிஷ்ட: ஸ்வமூர்த்திர் கணமத்யக: ।
பிரம்ம வாயு ஷிவாஹீஷ விப்யை: ஷக்ராதிகைரபி ||19
ஸேவ்யமானோऽதிகம் பக்த்யா நித்ய நிஷ்யேஷ ஷக்திமான் ।
மூர்த்தயோऽஷ்டாவபி த்யேயாஸ்சக்ர ஷங்க வராபயை: ||20
யுக்தா ப்ரதீப வர்ணாஸ்ச ஸர்வாபரண பூஷிதா: ।
தாத்ருக்ரூபாஸ்ச பஞ்சாஷத் ஞான முத்ராபயோத்யதா: ||21

க்ருத்தோல்க, மஹோல்க, வீரோல்க, த்யுலோக மற்றும் சஹஸ்ரோல்க இவை அஷ்டாக்ஷர ஜப நியாஸத்தில் கூறப்பட்டுள்ளன.

விஷ்வ, விஷ்ணு என்பது சஹஸ்ர நாம ரூபங்கள்.
கேசவ, நாராயண என்பது 24 ரூபங்கள்.
விஷ்வ, தைஜஸ என்பது 4 ரூபங்கள்
மத்ஸ்ய, கூர்ம என்பது 10 ரூபங்கள்.

இவர்கள் அனைவரும் சுற்றி நின்று, மூலரூபத்தில் இருக்கும் ஸ்ரீஹரியை வணங்குகிறார்கள் என்கிறார் கவி.

அரித[3]ரவராப[4]யாங்கித சதுர்பு[4]ஜனு நால்கெரடு[3]
ரூபங்க[3]ளு ப்ரதீ[3]பவர்ண ।

ஸருவாப[4]ரணபூ[4]ஷிதவாத[3] மத்[3]ரூப நிருத
மேயவு முமுக்ஷுகளிந்த[3]லி ||21

அரி-சக்ரம். தர- சங்கு. வர- வரமளிக்கும் முத்திரை. அபய - அபய ஹஸ்தம் இவற்றுடன் கூடிய, நான்கு கரங்களுடன். 4*2=8 உருவங்களுடனும், விளக்கின் ஒளியில், அனைத்து அணிகலன்களையும் தரித்தவனான நான் (பிரணவ பிரதிபாத்யன்), நித்ய தத்வ விஷயமாக, முக்திக்கு தகுதி உடைய ஜீவர்களால் காணப்படுபவனாக உள்ளேன்.

தந்த்ரஸார மூலம் 1-18,19,20 ஸ்லோகங்கள் முந்தைய பத்யத்தில் கொடுத்துள்ளேன். அதற்கான பொருள் விளக்கத்தை இப்போது பார்ப்போம். இவை, அனைத்திற்கும் மூல மூர்த்தியான, நாராயண அஷ்டாக்ஷர பிரதிபாத்யனான பிரணவ ஸ்வரூபன் நாராயணனின், தியான மந்திரமாகும். அஷ்ட மஹா மந்திரங்களின் சாரங்களே இந்த மூன்றில் உள்ளன.

பகவான் உதய கால சூரியனைப் போல ஒளி படைத்தவராக உள்ளார். பகவத் சரீரம், கருணை மயமானது. பகவான், சக்ரம், சங்கு, கதா, பத்மம் ஆகியவற்றை நான்கு கரங்களில் தரித்துள்ளார். ஸ்ரீதேவியும், பூமிதேவியும் அவரை ஆலிங்கனம் செய்து தழுவிக் கொண்டுள்ளார்கள். அவர், விஷ்வ, தைஜஸ, ப்ராக்ஞ, துர்ய, ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா, ஞானாத்மா என்கிற பிரணவத்தின் எட்டு மூர்த்திகளின் நடுவில் விளங்குகிறார். அவரை, பிரம்மா, வாயு, ருத்ர, சேஷ, கருட, இந்திர மற்றும் மற்ற தேவதைகள் வழிபடுகின்றனர். இவர் பூர்ண சக்திவந்தனாக விளங்குகிறார்.

நாந்தான் அப்பேர்ப்பட்ட ஆண்டவன். (பகவானின் வாக்கியம் இது). அப்பேர்ப்பட்ட இறைவனையே நாம் தியானிக்க வேண்டும். அதே சமயம், விஷ்வ, தைஜஸ, போன்ற எட்டு ரூபங்களையும் தியானிக்க வேண்டும். இந்த ஒவ்வொரு ரூபத்திலும் சக்ர, சங்கு, வர மற்றும் அபய ஹஸ்தங்கள் உள்ளன. மற்றும் தீபத்தின் ஒளியைக் கொண்டவனாக இருக்கிறான்.

என்னுடைய தந்த்ரஸார சங்கரஹ தமிழ் - பகுதி 1 அட்டைப்படத்தைப் பார்க்கவும். இதையே அங்கு கொடுத்துள்ளேன்.

எட்டு மூர்த்திகளின் நடுவில் மூலரூபி நாராயணன் உள்ளார். அவர், மேல் வலது கரத்தில் சக்ரத்தையும், மேல் இடது கரத்தில் சங்கினையும், கீழ் வலது, கீழ் இடது கரங்களில் கதை, பத்மங்களை தரித்துள்ளார். அவரது இடது பக்கத்தில் ஸ்ரீதேவி, வலது பக்கத்தில் பூதேவியும் இருக்கின்றனர். அவரது ஒளி உதிக்கும் சூரியனைப் போல சிவப்பாக உள்ளது. விஷ்வ, தைஜஸ போன்ற எட்டு உருவங்களிலும் நான்கு கரங்களில் மேற்சொன்ன சக்ர, சங்கு, வர, அபய முத்திரைகள் உள்ளன. விளக்கிற்கு இருப்பதைப் போல மஞ்சள் வர்ணம் அவற்றில் உள்ளன.

இப்படியாக, மஹாமந்திரங்கள் (எட்டு) ஜெபிக்கும்போது, பொதுவாக, தியானம் செய்ய வேண்டும். எந்த ஜபத்திற்கும், அங்கன்யாஸ, கரன்யாஸ, தியானம் ஆகியவை - ஜபத்திற்கு முன்னும், பின்னும் தேவையானவை. இவை செய்யவில்லையெனில், அந்த ஜபம் பலன் தராது.

தார நாராயணாஷ்டாக்ஷரவு வ்யாஹ்ருதியு
ஈராருவர்ண கா³யத்ரிமந்திர |
ஸாரமாத்ரு புருஷஸூக்த வைஷ்ணவக³ளிவு
நீரஜாஸன கேளு மஹமந்த்ரவு ||22

'ஓம்காரம்', நாராயண அஷ்டாக்ஷரம், வியாஹ்ருதி, 2*(6+6=12)=24 எழுத்துக்களைக் கொண்ட காயத்ரி, 50 மாத்ருக வர்ணங்கள், புருஷ சூக்தம், இரண்டு வைஷ்ணவ மந்திரங்களான வாசுதேவ மந்திரம், விஷ்ணு மந்திரம் ஆகியவற்றை நான் உபதேசித்தேன். கேட்பாயாக. பிரம்மதேவனே.

இந்த எட்டு மந்திரங்களே, அஷ்ட மஹா மந்திரங்கள் ஆகும். இவை மட்டும் இந்த கன்னட ப்ராக்ருத தந்த்ர சாரத்தில் கூறப்பட்டுள்ளன. இனி அடுத்து, பல ஸ்ருதியைக் கூறி, ஸ்தோத்திரத்தை முடிக்கிறார்.

ஸீதாரமண மூலராமனதிஹருஷதி³
விதா⁴தகு³பதே³ஷிஸித³ ஈ தெரத³லி ।
ப்ரீதியிந்த³லி நிரந்தரத³லித³ படி²ஸெ
ஸேஷாதபத்ரனு காமிதார்த்தவீவ ।।
(ப்ரீதியிந்த³லி த்³வாதஷார்வதி படி²ஸலு
விதா⁴தபிதனு காமிதார்த்த²வீவ ।।23

சீதாபதி மூலராம தேவன் மகிழ்ச்சியுடன் பிரம்மனுக்கு இவ்வாறு உபதேசித்தான். இவ்விதமாக பக்தியுடன் எப்போதும் விடாமல் இதைப் படித்தால், பாம்பினை குடையாகக் கொண்டவன், வேண்டியதை நல்குவான்.

சேஷ+ஆதப+த்ர- பாம்பினைக் குடையாகக் கொண்டவன். இது பல-ஸ்ருதி. பயன்பாட்டுப்பா போல அமைந்துள்ளது. கன்னட தந்த்ரசாரத்தின் கர்தா கூறுகிறார். சீதை மணாளன் ஸ்ரீமூலராமன் ஹரி. அவர் நான்கு தலை பிரம்மனுக்கு இவ்வாறு அருளினார். இந்தப் பாடலை அனுதினமும் பக்தியுடன் பாடுபவர்களுக்கு, அவர்களின் மன விருப்பங்கள் அனைத்தையும், பாம்புக் குடையின் கீழ் இருக்கும் ஹரி நல்குவார் என்று கூறி, சுபமாக முடிக்கிறார்.

மூல தந்த்ரசார சங்க்ரஹத்தில் 4 அத்தியாயங்கள். மேலும் பல விஷயங்கள் உள்ளன. இங்கே, முதல் அத்தியாயத்தில் கூறப்பட்ட அஷ்ட மஹா மந்திரங்கள் மட்டும் எப்படி பிரணவத்திலிருந்து தோன்றின என்பதை மட்டும் குருநாதர் எடுத்துக் காட்டியுள்ளார். கிரந்த விஸ்தாரம் கருதி, இந்த இடத்தில் நிறுத்தி, தொடர்ந்து பல பாகத்தை கூறுகிறார். நாம் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், உலகில் உள்ள அனைத்து ஒலிகளும், எழுத்துக்களும், மறையின் முதல் வர்ணமான 'ஓம்'காரத்திலிருந்து தோன்றியவை என்பதே ஆகும்.

ப்³யாக³வாடத³ ரங்க³னொலித³ ஸ்ரீநரசிம்ஹ
பா⁴க³வதரணுக³ ஜகன்னாத²தா³ஸ ।
பா³கி³ விக்³ஞாபிஸலு கைகொண்டு³
பரமானுராக³த³லி பேளிதே³வு தந்த்ரஸார ।।24

ப்யாகவாட-வை சேர்ந்த ரங்கனொலித ஸ்ரீநரசிம்ம பாகவதரின் மகனான ஸ்ரீஜகன்னாத தாசர். பணிந்து விண்ணப்பித்ததை ஏற்று, மிகவும் அன்புடன் (அவரின் குருவாகிய நான்) இந்த தந்த்ர சாரத்தை கூறினேன்.

இந்தப் பாடல் இயற்றப்பட என்ன காரணம் என்பதை இந்த செய்யுளில் தெளிவு படுத்தியுள்ளார். இப்போது ஜகன்னாததாசரைப் பற்றி சுருக்கமாக பார்ப்போம்.

மந்திராலயம் தற்போதைய ஆந்திர மாநிலத்தில், கர்னூல் மாவட்டத்தில் உள்ளது. அங்கு துங்கபத்ரா நதி பாய்கிறது. அதைக் கடந்து அந்தப் பக்கம் போனால், கர்னாடக மாநிலத்தின் ராய்ச்சூர் மாவட்டம் வரும். அதில் மானவி என்கிற தாலுக்காவில் ப்யாகவட என்னும் சிறு கிராமம் இருக்கிறது. அங்கு ஷாஷ்டிக வம்சம் (அரவத்தொக்கலு பிரிவு) ஹரிதஸ கோத்திரத்தில் கங்கரஸரு இல்லத்தை சேர்ந்த நரசிம்மாசார்யர் என்பவர் இருந்தார். அவர் ராகவேந்திர ஸ்வாமி மடம் என்னும் ராயர் மடத்தில் ஸ்ரீஸ்ரீ ஸுமதீந்திர தீர்த்தர், ஸ்ரீஉபேந்திர தீர்த்தர் போன்றோர்களிடம் கல்வி கற்றார். அவர் நன்றாக பாடவும் செய்வார். அவர் பராவசு கந்தர்வரின் அவதாரம் ஆவார்.

ஸ்ரீஉபேந்திர தீர்த்தர் இவருக்கு ஒரு கருவாகன லட்சுமி நரசிம்ம பிரதிமையைக் கொடுத்து அருளினார். ஸ்ரீபுரந்தரதாசர் இவரது கனவில் தோன்றி, 'ஸ்ரீ நரசிம்ம விட்டலா' என்னும் அங்கிதத்தை அருளினார். இவரும் பாடல்களை புனையத் துவங்கினார். 1727ம் ஆண்டு, இவருக்கு ஸ்ரீனிவாச ஆச்சார் என்பவர் பிறந்தார். அவரே பின்னர் ஸ்ரீஜகன்னாத தாசர்.

அவர் ஸ்ரீபலராமாச்சார்யர் (பின்னால் ஸ்ரீவரதேந்திர தீர்த்தர்) அவரிடம், சாஸ்திரங்களை கற்று மாபெரும் பண்டிதர் ஆனார். கன்னட தாச சாகித்யத்தின் மேரு கிருதியான ஸ்ரீஹரிகதாம்ருத சாரத்தை இயற்றினார். அப்பேற்பட்டவர் நம் குருநாதரின் சிஷ்யர். அவரே குருநாதரை தந்த்ரசாரத்தை கன்னடத்தில் இயற்றுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கேற்ப குருநாதரும் இதனை இயற்றிக்

கொடுத்தார். இதையே இந்த பத்யத்தில் குருநாதர் தெரிவித்துள்ளார்.

சில பழைய புத்தகங்களில், 24-29 வரையிலான பத்யங்களை ஸ்ரீஜகன்னாத தாசர் இயற்றி, தந்த்ரசாரத்துடன் இணைத்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய ஆய்வில், அனைத்து (29) பத்யங்களும் ஸ்ரீவரதேந்திர தீர்த்தரே இயற்றியுள்ளார் என்று தெரிய வருகிறது.

கருணாப்[3]தி[4] வஸுதே[3]ந்த்[3]ரராயர
க்ருபாப[3]லதி[3] விரசிஸிதே[3]வீ கி[3]ரந்த பத[3]ரூபதி[3] |
அரஸிக[1]னு நிந்தி[3]ஸலு குந்தா[3]வுதி[3]த[3]கெ
பா[4]ஸ்கரனுத[3]ய கோ[4]க தூ[3]ஷிஸித[3] தெரதி[3] ||25

கருணைக்கடல் வஸுதேந்திர தீர்த்தரின் அருள் பலத்தால் இந்த கிரந்தம் பத்ய ரூபத்தில் இயற்றப்பட்டது. ரசிகத் தன்மையற்றவர்கள் இதனை நிந்திப்பதால் என்ன குறை வந்துவிடப் போகிறது? ஆதவனின் தோற்றத்தைக் கண்டு ஆந்தை தூஷிப்பதால், வெளிச்சம் என்ன ஆகிவிடும்?

இந்தப் பாடலை (பல்லவி- சரண அமைப்பு கொண்ட கிருதி) பதம் என்று கூறுவார்கள். குருநாதர் ஸ்ரீவரதேந்த்ர தீர்த்தர் இயற்றியது. அவரின் ஆசிரம குரு ஸ்ரீவசுதேந்திர தீர்த்தர். அவர் 1750 - 1761 வரை பீடத்தை ஆண்டார். குருகுண ஸ்தவனம் மற்றும் தந்த்ரசார சங்க்ரஹம் இவற்றிற்கு சம்ஸ்கிருதத்தில் உரை எழுதியுள்ளார். அவர் கெஞ்சனகுட்டாவில் பிருந்தாவனஸ்தர் ஆனார். தன் குருவின் அடிச்சுவட்டை ஒட்டியே, இவர் கன்னடத்தில் இந்த கிரந்தத்தை இயற்றினார். இது கன்னட நூல் என சிலர் ஆட்சேபித்தார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், ஆந்தையானது இருட்டை ஒழிக்கும் சூரியனை நிந்திப்பது போல் உள்ளது என்கிறார் குருநாதர்.

த⁴ர்மார்த்த² காமமோக்ஷக³ளீவ கி³ரந்தவிது³ நிர்மாண
மாடி³ஸித³ ராமசந்திர ।
ஹேமக³ர்ப்ப⁴கெ³ (ப³ர்மக³ர்ப்ப⁴கெ³) ஒலிது³
பேளித³ மஹாமந்த்ர மர்மக³ளனரிது
ப⁴ஜிஸுவனெ த⁴ன்ய ||26

அறம், பொருள், இன்பம், விடுதலை (வீடு) நல்கும் நூல். இதை வடித்தவர் பெருமாள் ராமசந்திரனே. பிரம்ம தேவனுக்கு மகிழ்ந்து கூறிய நூல் இது. எட்டு பெரும் மந்திரங்களின் ரகசியங்களை அறிந்து பஜித்தால், அவனுக்கு எல்லாமே சித்திக்கும். பர்ம கர்ப = தங்க கர்ப்பன். பிரம்மனுக்கு பர்மகர்ப்பன் என்று பெயர்.

தொடக்கத்தில் பார்த்த மாதிரி, இந்த நூல் இறைவனாலேயே இயற்றப்பட்டு, பிரம்மனுக்கு உபதேசிகப்பட்டது. இதில் எட்டு மகாமந்திரங்களின் பெருமைகள், ஜபகிரமம் அனைத்தும் உள்ளன. இதனை தக்க ஆசான் மூலம் கற்று, அனுஷ்டித்தால், ஸ்ரீமூலராமனின் தயவால் அவனுக்கு அறம், பொருள், இன்பம், வீடுப்பேறு என்று சொல்லப்படும் நால்வகை புருஷார்த்தங்களும் சித்திக்கும் என்று நமது குருநாதர் பலன் கூறியுள்ளார்.

நம்பிக்கையுடன் மந்திரங்களைக் கற்று, முறைப்படி ஜெபித்தால் அனைத்தும் கிட்டும். இது திண்ணம். ஐயம் வேண்டாம். 'ரோசனார்த்தம் பலஸ்ருதி' என்பது போல பலன் கூறினால்தான் வாசகர்களுக்கு உற்சாகம் வரும் என்பது பண்டைய மரபு.

வரதே³ந்த்³ரமுனிரசித ஈ தந்த்ரஸாரவனு
ப³ரெதோ³தி³ கேளி மோதி³ஸுவ ஜனர ।
வரமூலராம வேத³வியாஸரிஹபரதி³
கருணிபரு பே³டி³தி³ஷ்டார்த்த²க³ளனு ||27

வரதேந்திர ஸ்வாமிகள் இயற்றிய இந்த தந்த்ரஸாரத்தை எழுதிப் படித்து, கேட்டு மகிழும் மக்களுக்கு ஸ்ரீமூலராம, வேதவியாஸ தேவர், இம்மை, மறுமை இரண்டிலும் வேண்டிய அனைத்தையும் நல்குவார்.

இந்த செய்யுளில் வரதேந்திர முனிவரே இதை இயற்றினார் என்று சொல்லியிருப்பதால், அனைத்து 29 சரணங்களையும் அவரே இயற்றினார் என்று புலப்படுகிறது. பழைய பதிப்புகளில் கூறப்பட்ட மாதிரி, பல ஸ்ருதி மட்டும் ஸ்ரீஜகன்னாத தாசரால் இயற்றப்பட்டதோ என்னும் சந்தேகம் அறவே அழிந்தது. அந்த காலத்தி எந்த ஒரு நூலையும், ஒருவர் கைப்பட எழுதிப் படித்து, இன்பமுறுவதே பழக்கமாக இருந்தது எனலாம். பல பாடல்களில் இவ்வாறே வருகிறது.

ராயர் மடத்தில் ராயருக்குப் பின் வந்த அனைத்து யதிகளும், கன்னடத்தில் பாடல்களைப் புனைவதில் வல்லவர்களாக இருந்தார்கள் என்பது பலரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது தெரிகிறது. இந்த ப்ராக்ருத தந்த்ர சாரத்தையும், குருநாதர் ஸ்ரீவரதேந்திர தீர்த்தர்தான் இயற்றினர் என்று திண்ணம் ஆகிறது. இதிலும் பலன் கூறப்பட்டுள்ளது. படிப்பவர்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கும் என்று நம்பிக்கை அளிக்கிறார் நம் குருநாதர்.

மங்க³ளம் ரமாபதிகெ³ மங்க³ளம் த்ருஹிணபிதகெ³ மங்க³ளம்
த³³ஷப்ரமதி முனிமான்யகெ³ ।
மங்க³ளம் ஷிவேந்த்³ராதி³ ஸுரநிக³³ரபூஜ்யனிகெ³
மங்க³ளம் ஜக³³த்விலக்ஷணரூபகெ³ ।।28

இலக்குமி மணாளனுக்கு மங்களம். பிரம்மனின் தந்தைக்கு மங்களம். மத்வ முனிவரால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீமூலராமருக்கு மங்களம். சிவன், இந்திரன் போன்ற தேவர் கூட்டம் வணங்கியவனுக்கு மங்களம். உலகின் இயல்புக்கு மாறாக உள்ளவனுக்கு மங்களம்.

எந்த நூலை முடிக்கும் முன்னரும், அதை மங்களகரமாக கடவுள் வாழ்த்துப்பாவுடன் முடிப்பார்கள். அதையே இங்கு குருநாதர் செய்துள்ளார். தந்த்ரசாரத்தி மூலப்பொருள் எல்லாம் பிரணவப்ரதிபாத்யனான நாராயணனிடமிருந்து தோன்றியது என்பதே. அவன் என்றும் இலக்குமியை இணைபிரியாதவன்.

அவன் பிரம்மனின் தந்தை (த்ருஹிணபதி) மற்றும் பிரம்மனுக்கு இந்த தந்த்ரசாரத்தை உபதேசித்தவர்.

இதற்கு மூலமான தந்த்ரசார சங்க்ரஹத்தை வடமொழியில் இயற்றியவர் தஷபிரமதிமுனி என்கிற ஸ்ரீமத்வாசார்யர். அந்த நாராயணன் - சிவன், இந்திரன், முதலிய தேவர்களின் கூட்டத்தால் வணங்கப்படுப்படுபவன். அந்த நாராயணனின் உருவம், நமக்குத் தெரிகிற மாதிரிதான் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆகையால், ஹரி ஜகத் விலக்ஷணன்.

உதாரணத்திற்கு, நரசிம்ம ரூபம், பிரம்ம ஸ்ருஷ்டியிலேயே கிடையாது. அது ஜகத் விலக்ஷண ரூபம். இப்பேர்ப்பட்ட நாராயணன், மூலராமனுக்கு மங்களம் என்று கூறி முடிக்கிறார். இதனால் படிப்போர்களுக்கு நன்மையே உண்டாகும் என்பது உறுதி

இப்பத்தொம்ப⁴த்து பத³க³ளெம்ப³திவிமல
புஷ்பமாலிகெ மூலராமனடி³கெ³ |
அர்ப்பிஸிதே³வீ ஸுமனதா⁴மவனு
தி³னத³ல்லி ப¹ப்ப¹தி³ஹதே பு³த⁴ர மஸ்தகத³லி ||29

இதி ஸ்ரீ வசுதேந்திர தீர்த்த கரகமல சஞ்சாத ஸ்ரீவரதேந்திர தீர்த்த பூஜ்ய சரணக்ருத ப்ராக்ருத தந்த்ரசாரம் சம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

29 சரணங்களைக் கொண்ட, குற்றமற்ற இந்த பாமாலை என்கிற பூமாலையை மூலராமனின் திருவடிகளில் அர்ப்பணித்தேன். இந்த பூமாலை போன்ற பாமாலையை தினமும் பேரறிஞர்கள் தங்கள் தலையில் தரித்துக் கொள்கிறார்கள். அதாவ்து, அவ்ர்கள் ஆதரவு தந்து தினமும் பாராயணம் செய்து பலன் பெறுகிறார்கள் என்பது கருத்து.

இப்படியாக ஸ்ரீவசுதேந்திர தீர்த்தரின் சீடரான ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் இயற்றிய கன்னட தந்த்ரசாரம் என்னும் பாடல் முற்றுப் பெற்றது. ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

இது 29 சரணங்களைக் கொண்ட கிருதி ரூபத்தில் உள்ள பாடல். பதம் என்றும் கூறுவார்கள். குருநாதரே 29 சரணங்கள்தான் உள்ளன என்று கூறியிருப்பதால், எந்தக் காலத்திலும் யாராலும் இடைச்செருகல்களை செய்ய முடியாது. இதனை இயற்றி, அவரின் உபாசனா மூர்த்தியான மூலராமனுக்கு அர்ப்பணித்தார். இந்த பதத்தில் மூன்று முறை 'மூலராம' என்கிற சொல் வருகிறது. ஆகையால் 'மூலராம' பிரதிமை மந்திராலய ராயர் மடத்தில்தான் உள்ளது என்று உறுதிப்பட கூறுகிறார் ஸ்ரீவரதேந்திர குருநாதர். இதை அறிஞர்கள் தினமும் படித்து, தங்கள் மூளையில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்னும் தன் அவாவையும் கடைசியில் தெரிவித்துள்ளார்.

இப்படியாக ப்ராக்ருத தந்த்ரசாரம் முடிவுற்றது. ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

இதன் தமிழ் வடிவம், தமிழாக்கம், விளக்கம் அனைத்தும் இந்த அற்ப மதியினுடையது. ஆன்றோர்கள் இதனை ஏற்றுக்கொண்டு, குற்றங்களை மன்னிக்கும்படி இறைஞ்சுகிறேன்.

***